ஜநவிநோதிநி.

Janavinodini.

A POPULAR MAGAZINE

OF

AMUSING AND INSTRUCTIVE INFORMATION
IN TAMIL

(ILLUSTRATED.)

1885.

அன்பளிப்பு. திரு. க. சுப்பிரமணிய ஐயரவர்கள்

Vol. XVI.

MADRAS:

PUBLISHED BY THE MADRAS SCHOOL BOOK AND VERNACULAR
LITERATURE SOCIETY, AND SOLD AT THEIR
DEPOSITORY, OLD COLLEGE.

PRINTED AT THE S. P. C. K. PRESS, VEPERY, MADRAS. 1886.

CONTENTS.

	Page.
Alchemy—a trick	79
Anecdote about the Empress, An	92
Benevolent Hero, A....195,	224
Benevolent Pacheappa — a Biographical sketch, The...	51
Bernard Palissy, the great Potter	4
British Energy and Courage in India, The	30
Burma	221
Child's Corner 45, 93,	139
Choice of a Trade, A Boy's....	126
Cleanliness is next to Godliness (A Dialogue.)	250
Conversation, On	143
Diogenes and Alexander ...	247
Droupadi's Vow of Revenge... 183, 214,	234
Fairy Tale, A	285
Friendship	163
Good Breeding	160
Helping without Money	27
Her Majesty's Crown	1
Hindu Music, On	44
Hints to Mothers	14
How Children Grow	270
How to Comfort the Sick	271

	Page.
How to Preserve Health	242
Japan..............................	279
Jayasena, The Story of	256
Knowledge of the World	230
Learning of a Pandit, The....	40
Maharajah of Travancore, The.	100
Many Things in a Few Words	169
Measure for Measure 175,	203
Modesty and Bashfulness	122
News, 50, 96, 142, 168, 194, 220, 246,	292
Nine Gems of Literature, The.	103
Obeying One's Father	137
Peacock Throne at Delhi, The.	110
Perseverance, On	64
Policemen and their work, Our	74
Post Office, The Past and Present of the	273
Sanskrit Poets, An Account of 165, 181,	201
Seaside, A Visit to the......	97
Strange Animal Friendships.	208
Strange Witness, A	151
Think Patiently................	192
Truthful King, The Tale of a.	18
Vásava Datta, a worthy Woman 67,	113
What is the Afghan Barrier?	87

பொருளட்டவணை.

விஷயம்	பக்கம்
அங்கிலேயர் இந்துதேசத்தில் காட்டிய தாளாண்மையும் தைரியமும்.	30
அடக்கம்—ஸங்கோசம்	122
ஆப்கானிஸ்தானத்தின் அரண் எது?	87
இந்துக்களின் ஸங்கீதவித்தையைப் பற்றி	44
உண்மைதவறுத உத்தமராஜன் கதை.	19
உலகக்கியானம்	230
ஊக்கமது கைவிடேல்....	64
ஊர்காப்பாளரும் அவர் செய்காரியங்களும்	74
✓ கடற்கரைக் காட்சி	97
கவி நவரத்தினம்	103
குழந்தைகள் வளருவதெப்படி	270
சமாசாரம், 50, 96, 142, 168, 194, 220, 246, 292	
சரீரசுகாதார நியமம்	242
சிநேகம்	163
சிலசொற்களில் அடங்கிய பல விஷயங்கள்	169
சிறுவர்க்கான கதை 45, 93,	139
டில்லியிலிருந்த மயூரசிங்காதனம் ...	110
டையாஜினிஸ் என்னும் ஞானியும் சிகந்தரும்	247
தகப்பன் சொல் தவருமை	137
தபால்சாவடியின் முற்கால தற்கால நிலைமை	273
தயாளகுணமுள்ள தீரன்	195,224
தன்னுயிரைப்போல மன்னுயிரை நினை	175, 203
தாய்மார் மக்களைப் பயிற்றும் முறை.	14
திருவனந்தபுரம் மகாராஜா	100
திரௌபதி சபதம் முடித்தல். 183, 214	234
தெய்வபக்திக்கு இரண்டாவது தேகசுத்தி (ஒரு சம்பாஷணை.)	250
நன்னடக்கை அல்லது மரியாதை...	160
நிதானித்து யோசிக்கவேண்டும்	192
நோயாளிகளுக்கு இதம்பண்ணுதல்.	271
பச்சையப்பமுதலியார் என்னும் தர்மிஷ்டருடைய சரித்திரம்......	51
பணமில்லாமலே பரோபகாரம் செய்யலாம்	27 ✓
பண்டிதர்கல்விகற்றுத் தேறின விநோதம்.........	40
பர்மாதேசத்தைப்பற்றிய சில விஷயங்கள்	221
பலிஸ்ஸி என்னும் பிரசித்திபெற்ற குலாலன்	4
மகாராணியாரைப்பற்றிய ஒரு விசேஷம்	92
ரஸவாதம் என்னும் பித்தலாட்டம்...	79
வார்ஸவதத்தை என்னும் பெண்மணி.	67, 113
விக்டோரியா மகாராணியாருடைய மணிமகுடம்.	1
விசித்திரமான சாட்சி.............	151
விநோதமான கதை	285
வெவ்வேறுஜாதி ஜந்துக்கள் பேதமில்லாமல் நேசிக்கும் விசித்திரங்கள்.	208
ஸம்பாஷணை விதிகள்	143
ஸம்ஸ்கிருத கவிகள் சரித்திரம், 165, 181,	201
ஜப்பான்தேசத்தைப்பற்றி	279
ஜயசேனராஜன் கதை	256
ஜீவனத்துக்காகத் தொழில் தேடின சிறுவன்	126

ஜநவிநோதிநி.

இல. 1, 2.] { ஜனுவரி௴ / பெப்ருவரி௴ } 1885. [புஸ்த. XVI.

விக்டோரியா மகாராணியாருடைய மணிமகுடம்.

உலகத்தையாளும் ராஜாக்களுக்காயினும் ராணிகளுக்காயினும், அவர்கள் ராஜ்யாதிபத்தியத்தைப் பெற்றுக்கொண்டதற்கு நிதர்சனமாய், முதல்முதல் ராஜசின்னமாகக் கிடைப்பவை ராஜசிங்காசனமும் மணிமகுடமுமேயாம். அவ்வண்ணமே பூர்வகாலந்தொடங் கித் தேசங்களையாண்ட மன்னர்கள், பரம்பரையாக முன்னோர்கள்பெற்றுவந்த சிங்காசனத்தில் வீற்றிருந்து மணிமகுடங்களை முடியில் தரித்து அரசாட்சி செலுத்திவந்தனர். இக்காலத்து மகாராஜாக்களும் தம் அரசாட்சிக்கு அறிகுறியான கிரீடத்தைத் தரித்துக்கொண்டே ராஜ்யபரிபாலனம் செய்துவருகின்றார்கள். அவற்றுள் நமது தேசத்தையாளும் விக்டோரியா சக்கரவர்த்தினியார் தமது

ராஜ்யபாலனத்துக்கு அறிகுறியாக முடியில் தரித்திருக்கும் மணிமகுடம் மிகவும் அற்புதமானது. மேற்கில் போர்க்கலகம் நேரிட்டிருக்கிற இந்தச் சமயத்தில் எல்லாராஜாக்களும் அங்கிலேயதுரைத்தனத்தார்க்குத் துணையாயிருந்து அவர்களுடைய அரசாட்சியை நிலைநிறுத்த ஊக்கங்கொண்டிருக்கிறார்களாகையால், இத்தருணத்தில் அங்கிலேயராஜ்யத்துக்குரிய இம்மணிமுடியின் சிறப்பை வெளியிடுவது உசிதமெனத்தேர்ந்து அதை இதன் அடியில் எடுத்துச்சொல்லுவோம்.

இப்பொழுது விக்டோரியா சக்கரவர்த்தினியார் தரித்திருக்கும் கிரீடம் இவ்வளவு விலைபெற்றதென்று மதிப்பிட்டுச்சொல்ல ஒருவராலுமாகவில்லை; அதன் விலை கோடிரூபாய்க்குமேல் ஓடுகின்றதென அநேகர் உத்தேசிக்கிறார்கள். அதில் அமைத்திருக்கும் ஒவ்வொரு ரத்தினமே தனித்தனி அநேகமாயிரம் ரூபாய் விலைபெற்றது. புதிதான இம்மணிமகுடம் பழைய கிரீடங்களிலும் மற்றும் பல உயர்ந்த ஆபரணங்களிலுமிருந்த சிறந்த நாநாவித ரத்தினங்களைக்கொண்டு 1838-ஷ செய்யப்பட்டது. இந்தக் கிரீடம் முத்து, வச்சிரம், மரகதம், மாணிக்கம், இந்திரநீலம்முதலிய மேலானரத்தினங்கள் இழைக்கப்பெற்றது. இம்மணிமுடியானது உள்ளே வெண்பட்டு வைத்துத் தைத்த சிவப்பு மஹமல் குல்லாயின்மேல் அமைக்கப்பட்டிருக்கின்றது. அம்முடியின் அடியிலே நவரத்தினகசிதமான நெற்றிக்கட்டு ஒன்று உளது. அந்த நெற்றிக்கட்டின் கீழ்ஓரத்திலே 129 முத்துக்கள் அமைந்த ஒரு முத்துக்கோவையும், மேல்ஓரத்திலே 112 முத்துக்கள் அமைந்த ஒரு முத்துக்கோவையும் இருக்கின்றன. அவ்விரண்டு முத்துவரிசைகளுக்கும் மத்தியில் கிரீடத்தின் முன்புறத்திலே மிகப்பெரிதான இந்திரநீலமணி ஒன்று பதித்திருக்கின்றது. அந்த ரத்தினம் முழுதும் செவ்வையாய்ச் சாணைபிடிக்கப்படவில்லை யாயினும், ஜகஜ்ஜோதியான காந்தியுடையது. இந்த நீலரத்தினம் 4-வது ஜார்ஜ் அரசன் ராஜமுடியில் அமைப்பதற்காகவே வாங்கியதென்கிறார்கள்.

அந்த நெற்றிக்கட்டின் பின்புறத்தில் அவ்வண்ணமே ஒரு நீலரத்தினமும், பக்கங்களில் ஒவ்வொரு பக்கத்துக்கும் மும்மூன்றாக ஆறு நீலமணியும், அவற்றின் இடையில் எட்டு வச்சிரக்கற்களும், அவ்வேழு நீலமணிகளுக்குக் கீழும்மேலும் 14 வச்சிரக்கற்களும், 8 மரகதமணிகளும், அம்மரகதமணிகளைச் சுற்றி 128 வச்சிரக்கற்களும் பதித்திருக்கின்றன. அந்த மரகதமணிகளுக்கும், நீலமணிகளுக்கும் இடையிலே 160 வைரக்கற்கள் அடங்கிய 16 சித்திரப்பூக்கள் செதுக்கப்பட்டிருக்கின்றன. இந்த நெற்றிக்கட்டுக்குமேலே எட்டு வச்சிரமணிகளால் சூழப்பட்ட எட்டு நீலமணிகளும், அவற்றினிடையே 148 வைரங்கள் அடங்கிய 8 தோரணங்களும் சித்திரிக்கப்பட்டிருக்கின்றன.

அந்த மகுடத்தின் மத்தியிலே முன்புறத்தில் வைரக்கற்களால் விசித்திரமான சிலுவையொன்று சித்திரிக்கப்பட்டிருக்கின்றது. அச்சிலுவையின் மத்தியில் மிகவும் மேன்மைபெற்ற மாணிக்கம் ஒன்று உளது. அந்த மாணிக்கம் பல ராஜாக்கள் தரித்துக் கடைசியில் நமது மகாராணியாருடைய மணிமுடிக்கு வந்ததென்கிறார்கள். அந்த மாணிக்கத்தின் மத்தியில் ஒரு ரந்திரம்செய்து அந்த ரந்திரத்தின் நுனியில் மற்றொரு சிறியமாணிக்கம் அமைத்திருக்கின்றனர். அதைச் சுற்றி 75 வைரக்கற்கள் இழைத்துச் சிலுவை உருவம் ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

இவ்வாறு சிலுவையுருவம் சித்திரித்திருப்பது மணிமகுடத்தின் முன்புறத்திலே மாத்திரமல்ல; அதற்கு நேராகப் பின்புறத்திலும் இரண்டுபக்கங்களிலுமாய்ப் பக்கத்துக்கு ஒவ்வொன்றாகப் பின்னும் மூன்று சிலுவையுருவங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவை ஒவ்வொன்றின் மத்தியிலும் ஒவ்வொரு மரகதரத்தினமும், ஒரு பக்கத்துச் சிலுவைக்கு 132 வைரமும், மற்றொரு புறத்துச் சிலுவைக்கு 124-ம், பின்புறத்துச் சிலுவைக்கு 130-ம் அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்நான்கு சிலுவைகளுக்கு இடையிடையே வில்வதளம்போன்ற நான்கு வடிவங்கள் சித்திரித்திருக்கின்றனர். அவற்றின் மத்தியில் நான்குமாணிக்கங்களும், சுற்றிலும் முறையே 85-86-86-87 வச்சிரமணிகளும் இழைக்கப்பட்டிருக்கின்றன. அந்தச் சிலுவைகளுக்கு மேல் பல இலைகளும் காய்களும் அடங்கிய வளைவுகள் அமைந்திருக்கின்றன. இலைகள் பற்பலவிதமான 728 வச்சிரக்கற்களும், காய்கள் 32 முத்துக்களும் அமைத்துச் செதுக்கப்பட்டவை.

அந்த வளைவிலுள்ள வைரமணிகள் மொத்தம் 783 எனக் கணக்கிட்டிருக்கிறார்கள். அந்த வளைவுகளின் உச்சியிலிருந்து வைரக்கற்களில் அமைத்துக்கட்டிய நான்கு முத்துமாலைகள் தொங்குகின்றன. அவ்வளைவுக்குமேலே நவரத்தினகசிதமாய்க் கிச்சிலிப் பழம்போல உருண்டைவடிவமான ஒருசிகரம் அமைந்திருக்கின்றது. அதன் கீழ்ப்பாதி 304 ரத்தினங்களாலும், மேல்பாதி 244 ரத்தினங்களாலும், நடுவலயங்கள் 33 வைரங்களாலும் செதுக்கப்பட்டிருக்கின்றன. இவ்வண்ணம் அதி அற்புதமாய் நிர்மிக்கப்பட்ட மணிமுடியின் சிகரத்தில் ஒரு சிலுவையுண்டு; அதன்மத்தியில், நான்கு பெரிய வைரங்களாலும், 108 சிறிய வைரங்களாலும் சூழப்பட்ட நீலமணியொன்று பதித்திருக்கின்றது.

இம்மணிமகுடத்திலுள்ள ரத்தினங்களாவன:—செவ்வையாய் உருவம் ஏற்படுத்தப்படாத பெரியமாணிக்கம் 1, பெரியநீலமணி 1, சிறியநீலமணிகள் 16, மரகதமணிகள் 11, மாணிக்கம் 4, பலவகையான வச்சிரக்கற்கள் 2783, முத்துக்கள் 277 என ஒரு பத்திராதிபர் சொல்லுகிறார்.

வெகு விசித்திரமாக நிருமிக்கப்பட்ட ஜகஜ்ஜோதியான இந்த ரத்தினகிரீடத்தைப் பார்த்தவர் வெகு சிலர். மகாராணியாரை அனேகர் பார்த்திருக்கலாமாயினும், அவர்களின் முடியைப் பார்த்திரார்கள். ஏனெனில், மகாராணியாரவர்கள் இம்முடியைச் சிரசில் தரித்துக் கொள்வது ஏதோ சிலகாலங்களில் மாத்திரமே. இதைத் தலையில் தாங்குவது வெகு பாரமாயிருக்குமாகையால் சிலஸமயங்களில் மகாராணியாரவர்கள் சிரசில் தரிப்பதற்குப்பதிலாக முன்னே ஒருவர் கையில் தாங்கி நிற்பதுமுண்டு. வெளியே சவாரிபோவதுமுதலிய மற்றக்காலங்களிலோ சாதாரணமான பெருமாட்டிகளைப்போலவே மகாராணியாரும் ஒரு தொப்பியையே தரித்துக்கொண்டுபோவது வழக்கமாகையால், அந்தச் சமயங்களில் மகாராணியாரைக் காண்பவர்களுக்கும் அவர்களது மணிமுடியைக் காணக்கிடைப்பது அரிது. ஆதலால் அதன் வடிவழகை இச்சஞ்சிகையில் அமைத்திருக்கின்றோம், பாருங்கள். இவ்வுருவமேதான் நமது தேசத்தில் வழங்குகிற ரூபாய்முதலிய நாணயங்களில் காணப்படுகிற மகாராணியார் சிரசில் அமைந்திருக்கின்றதாயினும், அது மிகச் சிறிதாயிருப்பதால் அதனழகு நமக்கு இத்தனை தெளிவாய்த் தோன்றுவதில்லை.

பலிஸ்ஸி என்னும் பிரசித்திபெற்ற குலாலன்.

மனோபலத்தின் ஓர் அங்கமாகிய பொறுமை என்பது மிக நுண்ணியதும், கனம் மிக்கதும், அரியதுமாம். "பொறுத்தார் பூமியாள்வார்" என்றபடி பலவிதமான சுகங்கள் ஆட்சிகள் அனைத்திற்கும் ஆதாரம் பொறையே. பொறை இல்லாவிடின் இதயத்திற்கு இன்பம் தரும் ஆசையும் துன்பமாகிவிடும். ஊக்கமது கைவிடாத சிலர், அநேகருக்கு அற்பமெனத்தோன்றும் மட்பாண்டம் வனைதொழிலைக் கைக்கொண்டு அதில் எதற்கும் சலியாத பொறையும் கருமமுடிக்கும் துணிவும் உடையவர்களாகி, அவற்றின் பெருமை இத்தன்மையனவென்று வெளியிட்டிருக்கிறார்கள். அவர்களில் மிகவும் மகிமைபெற்றவராயிருந்த ஒருவருடைய வரலாற்றை அடியில் எடுத்துச் சொல்வோம்:—

சாதாரணமாக வழங்கும் விதம்விதமான பாண்டம் களிமண்ணினால் செய்யும் உபாயம் முற்காலத்தவர் வெகு பெயருக்குத் தெரிந்திருந்தும், பளிங்கெனத் துலங்கும் நாணயமான மட்பாண்டம்செய்யும் தொழில் மிகவும் அபூர்வமாக வழங்கியது. ஆனாலும் முன்னாளில் எதிரஸ்கர் என்பவர்கள் அவ்வகைப்பாண்டம் வனையப் பயின்றிருந்தார்கள். அவர்கள் கையால்வனைந்த பாண்

டங்கள் சிலவற்றைப் புராதன விநோதப்பொருட்காட்சிசாலைக ளில் நாளைக்கும் காணலாம். பின்னிட்டு நெடுநாள்வரையில் அவ் வித்தை கைகடந்துபோய், இப்பொழுது கொஞ்சக் காலத்திற்கு முன்னேதான் மீளவும் அகப்பட்டது. பூர்வகாலத்தில் எதிரஸ்கர் செய்த பாண்டம் விலையேறப்பெற்றது. ஆகஸ்தஸ் இருந்த காலத் தில் உண்கலத்திற்கு விலைவிகிதம் ஒரு இராத்தலுக்கு ஒரு இராத்தல் தங்கம். இந்தத் தொழிலை மூர் ஜாதியார் மறந்திடாமல் அனுசரித் துக்கொண்டுவந்ததாய்க் காண்கிறது. 1115-ம் வருஷம் மெஜார்கா தீவைப் பைஸர் பிடித்துக்கொண்டபொழுது, அந்த மூர் ஜாதியாருக் குள் இத்தொழிற்பயிற்சி வழங்கியது. சூறைசெய்து கொண்டு போன பொருள்வகையில் சில விதம்விதமான மட்பாண்டங்களை, பகைவர் தாம் பெற்ற ஜயத்தை என்றென்றைக்கும் சிந்தையில் நிறுத்தும் சின்னங்களாக, பைஸாவில் உள்ள சில பூர்வதேவாலய மதில்களுக்குள் வைத்துக் கட்டினார்கள். அவைகளை அம்மதில் களில் நாளதுவரையிலும் காணலாம். அதன்பின் இருநூறு வருஷம் சென்று இத்தாலியர் பளிங்கைப்போலத் துலங்கும் அவ்வகை மட் பாண்டம்செய்யத் தொடங்கி, மூர் ஜாதியார் அத்தொழில் செய்த ஸ்தானமாகிய மெஜார்கா தீவைக் குறிப்பிக்கும்படி, தாம் வனைந்த பாண்டத்திற்கு மேஜாலிகா எனப் பெயர் வழங்கினார்கள்.

இத்தாலியாவில் பளிங்குபோல மினுக்குள்ள மட்பாண்டம் வனையும் தொழிலை எல்லாரும் மறந்திட்டபின் மீளவும் பிளா ரென்ஸ்நகரத்திலிருந்த சித்திரக்காரனாகிய லியூக்கா டெல்லா ரப்பியா என்பவன் அதைக்கண்டறிந்து பயின்றனனென்றும், அவன் பகல் முப்பதுநாழிகையும் கைக்கொண்ட செதுக்குளியைக் கைவிடாது உழைத்து, இரவில் வெகு நாழிகைவரையில் சித்திரம் எழுதிப் பழ கிக்கொண்டுவந்த உற்பாதபிண்டம் என்றும் ஒருவர் எழுதுகிறார். அவன் சித்திரம் எழுதும் வித்தையை மிகுந்த விருப்பத்தோடு கற் றுக்கொண்டுவந்து, இராத்திரிகாலத்தில் நாழிகையேறச் சித்திரம் எழு திக்கொண்டிருக்கும்பொழுது, பாதம் இரண்டும் கடுங்குளிரில் விறைக்காவண்ணம் ஒரு கூடையில் மரம் இழைத்த செதுக்கல் சே கரித்து அதில் பாதத்தை வைத்துச் சூடேற்றிக்கொண்டு தன் வேலை யில் கண்ணாயிருப்பான். வெப்பம்-குளிர்-பசி-தாகம்முதலிய வா தைகளை இளமையிலேயே தாங்கி வழக்கப்பட்டிராதவன் எந்தத் தொழிலிலாயினும் தேறி நிபுணனென்று பெயரெடுப்பதுகூடாது; நானாவிதபோகங்களும் குறைவற அனுபவித்துச் சுகித்திருந்துகொ ண்டே மேன்மை அடைவோமென்று எண்ணுவோர் ஏமாறிப்போ வாரென்பதற்குச் சந்தேகமில்லை. எந்தத் துறையிலேனும் வரவரத் தேறித்தெளிந்து பிரசித்தராவோர் சுகமாய்ப் படுத்துத் தூங்குகிறவர் களல்ல, துயிலொழிந்து விழித்திருந்து எப்பொழுதும் ஓயாதுழைப் பவர்களேயாம்.

"இன்பம்வேண்டுவோன் துன்பந்தண்டான்.
துன்பம்வேண்டுவோ னின்பந்தண்டான்."

மேற்படி வியூக்கா கருத்தாய் முயன்று கைத்தொழில் செய்தும், அவன் சிலையில் சித்திரம்செய்து விற்றுத் தேறினபணம் குடும்ப ஸம்ரக்ஷணைக்குப் போதாமற்போயிற்று; அப்படி இருந்தும் அவன் மனம் சலிக்கவில்லை. அவன் அதுவரையில் சித்திரம் செதுக்கியது பாற்கல்லில். பாற்கல் மிக வைரமுள்ளது, விலை உயர்ந்தது. சற்று இளகி விலை எளிதாயுள்ள ஏதாயினும் ஒரு பொருளில் பிரதிமைகளும் அச்சுக்களும்செய்து விற்றால் வருமானம் செலவிற்குக் கட்டுமென்று அவன் சிந்தையிற் பட்டது. ஆனதுபற்றியே அவன் களிமண்ணில் உருவம்செய்து, அது நீடித்து உறுதி குன்றாதிருக்கும்படி பூச்சிட்டுச் சுடும் வகை இன்னதென்று கண்டறியப் பரிசோதனை செய்து பார்த்தான். பலவாறு பரிசோதனை செய்தபின், பூச்சிடும் பதார்த்தம் இன்னதென்று அவனுக்குத் தெரியவந்தது. அதைக் களிமண்ணில் பூசிச் சூளையில் முதிரவேகவைக்க, அது உரத்துப் பளிங்குபோல மின்னியது. பின்னிட்டு அதற்கு வர்ணம் தீரும் பக்குவத்தைக் கண்டறிந்தான். வர்ணம் தீரவே அது கண்ணுக்கு மிகவும் அழகாக விளங்கியது.

வியூக்கா செய்த நாணயமான பாண்டங்களின் பெருமை ஐரோப்பா எங்கும் எட்டி அப்பாண்டங்கள் வெகுதூரம் போய்ச்சேர்ந்தன. பிரான்சுக்கும் ஸ்பானியாவிற்கும் திரளாய் அனுப்பப்பட்டு அங்குள்ளவர்கள் அவைகளை மேன்மையாய்ப் பாராட்டி அதிக விலை கொடுத்து வாங்கினார்கள். அக்காலத்தில் பிரான்சு தேசத்துக் குலாலர் வனைந்து விற்ற பாண்டவகை புகர்நிறமான மட்டிச்சாடியும் வேறு சிறு மட்கலங்களுமே. பலிஸ்ஸியின் காலமளவும் இருந்த சீர் சற்றேறக்குறைய இதுதான். அவர் தீராப் பெருஞ் சங்கடங்களைக் கண்டும் சிறிதேனும் இளைக்காமல் உழைத்து உழன்று ஒருவாறு அச்சங்கடங்களைத் தவிர்த்த சுத்தவீரர். ஆகவே, அவர் செய்த அருமையான பலகாரியங்களாற் சிறந்த அவருடைய வரலாறுகள் எல்லாம் அபூர்வமான கற்பிதகதைகள்போலத் தோன்றும்.

பெர்னார்ட்பலிஸ்ஸி பிரான்சுதேசத்தின் தென்பாகத்தில் 1510-ம் வருஷம் பிறந்தவர் என்று உத்தேசிக்கிறார்கள். அவர் தகப்பன் கண்ணாடிவேலை செய்தவர்போலும். ஆதியில் பலிஸ்ஸி பயின்ற வேலையும் அதுவே. தாய்தந்தையர் சிறிது காலமாயினும் அவரைப் பள்ளியில்வைத்து எழுதப் படிக்கப் பயிற்றுவிக்க நிர்வாகமில்லாத ஏழைகளாயிருந்தனர். "யாவரும் எளிதில் பார்த்துப் படிக்கும்படி திறந்து வைத்திருக்கின்ற வானமும் பூமியும் தவிர வேறு புஸ்தகம் எனக்குக் கிடையாது" என அவர் பிற்காலத்தில் சொல்லியிருக்கிறார். ஆனாலும் அவர் கண்ணாடிக்கு வர்ணம் தீரும் முறையை முய

ன்று கற்றிருந்து, அப்பால் சித்திரம் எழுதப் பயின்று அதன்மேல் எழுதப் படிக்கவும் பழகினர்.

அவருக்கு முன்பின் பதினெட்டுப் பருவம் ஆக, கண்ணுடி வியாபாரம் இளைத்துப்போனதுபற்றி அவர் தந்தையின் வீட்டை விட்டுப் புறப்பட்டு முதுகில் அடைப்பை சுமந்துகொண்டு தமக்கு ஜீவனம்கிடைக்கும் இடம் தேடி உலகப்பரப்பில் உலாவித் திரியத் தலைப்பட்டார். ஆரம்பத்தில் அவர் காஸ்கனிக்கு நேர்முகமாய்ப் போய் வழியில் கண்ணுடிவேலை அகப்படும் இடங்களில் தங்கியிருந்து அதைச் செய்வதும், அப்போதப்போது சிறிது நேரம் நிலம் அளப்பதுமாய் இருந்தார். பின்பு அவர் வடக்குமுகமாய்ப் பிரயாணஞ்செய்து பிரான்சு, ப்லான்டர்ஸ், ஜாமானியாவின்தெற்கு இந் நாடுகளில் வெவ்வேறு இடங்களிலே நெடுகக் குறுகத் தங்கிப் போனுர்.

பலிஸ்ஸி மேற்சொல்லியவாறு ஏறத் தாழப் பத்து வருஷம் பிரயாணஞ்செய்து அதன்மேல் மணம்புரிந்து தேசாந்தரம் போவதை அம்மட்டில் நிறுத்திவிட்டு, கண்ணுடிக்கு வர்ணம் பூசியும் நிலம் அளந்தும் பிழைக்க சாரெந்தியின் தென்பாகத்தில் ஸேந்தீஸ் எனும் சிற்றூரில் நிலைக்குடியாயிருந்தார். அங்கிருக்கையில் அவருக்கு மக்கட்பேறு உண்டாகிச் சமுசாரக் கவலையும் செலவும் பெருகின; எவ்வளவோ பாடுபட்டும் வரவு செலவிற்குக் கட்டவில்லை. பின்னும் அதிகமாய் மெய்வருந்தி உழைக்காமல் தீராதெனத் தோன்றிற்று. கண்ணுடிக்குச் சாயந்தீரும் வேலை பிழைக்க உதவுமென்று நம்பியிருக்க இடம் இல்லாமல் போயிற்று. அவ்வேலையில் நாய்படாத பாடுபட்டு மெய்வருந்துவதை விட்டு மற்றேதாயினும் நயம் பெறும் முயற்சிசெய்து பிழைக்கத் தம்மால் ஆகுமென்று அவர் நினைத்தார்போலும். ஆனதனுலேயே மட்பாண்டங்களுக்கு வர்ணம் பூசித் தளுக்கிடும் தொழிலில் அவர் கருத்துச் சென்றது. முன் பயின்ற தொழிற்கு இனமான தொழிலெனினும் இவ்வேலை அவருக்கு எள்ளத்தனையும் தெரியாது. மட்பாண்டம் வனைந்து சுட்டதை அதற்குமுன் அவர் ஒருபொழுதும் கண்டதில்லை. இப்பொழுது அவருக்குக் கைத்துணையும் எவரும் இல்லை. தாமாகவே இத்தொழில் முறையைக் கண்டறிந்து பயின்ருல் பயிலலாமேதவிர வேறு வகை இல்லை. ஆனுலும் அவர் இதை நிர்வகிக்கத்தக்க உற்பாதபிண்டந்தான். அவருக்குத் தொழிலில் ஆசை நிறைந்து தொழில்பயிலும் அவா மிகுந்து கருமமுடிக்கும் துணிவும் கரைகடந்து, இறைக்க இறைக்க வற்ருத நீரூற்றுப்போலப் பொறுமை என்பது சுரந்தவண்ணமாயிருந்தது.

லியூக்கா டெல்லா ரப்பியாவின் கைவேலையெனத் தோன்றும் இத்தாலியாவில் வனைந்த சிறந்த பாத்திரம் ஒன்றை அவர் ஒரு நாள் கண்டதனுலேயே இந்நூதனமான தொழிலில் அவருக்குச்

சிந்தனை ஓடியது. நூதனமாய் ஒரு சிறிய பாத்திரத்தைக் காண்பது அதிசயமல்லவே. சாமானிய புத்தியுள்ளவர்கள் கண்ணெதிரில் காணும்பொழுதன்றி, கண்டபின் அதைக்குறித்து நினையார்களே. இரண்டொரு மாசம் முந்திக் காணச் சம்பவித்திருந்தால், பலிஸ்ஸி தாமும் அதை நினையார். காலவிசேஷத்தால் நூதனமாய் ஏதாயினும் ஒரு தொழில் செய்து பிழைக்கவேண்டுமென்றிருக்கையில், அவர் அச்சிறு கலத்தைக் கண்டார். காணவும் அதைப்போலத் தாமும் செய்யவேண்டுமெனும் ஆசை, பஞ்சிற் பறக்கும் நெருப்புப்பொறி போல அவர் மனதிற் பற்றியெரிந்தது. அப்பாத்திரத்தைக் கண்டு அவர் மனம் நிலைகுலைந்து தடுமாறியது. அப்பாண்டத்திற்குப் பூசித் தளுக்கிட்ட திரவியத்தைக் கண்டறியும் கடைப்பிடி, ஆசை எனும் பேய்போல் அன்றுதொட்டு அவர் நெஞ்சில் குடிகொண்டது. அவர் மணம்புரிந்துகொள்ளாமல் தனியாயிருந்திருப்பாரானால், அந்த நுட்பத்தைத் தேடிக் கண்டறிய இத்தாலியாதேசத்திற்கு உடனே பிரயாணப் பட்டிருப்பார். ஆனாலும், சமுசார சாகரத்தில் இறங்கித் தத்தளித்த அவர் என்னசெய்வார். பெண்சாதி காற்கட்டு, பிள்ளை வாய்க்கட்டு. இந்தக் கட்டுக்களை எளிதில் அறுத்து அவர் களை விட்டுப் போகக்கூடாமைபற்றி, அவர் மனைவிமக்களை விட்டுப் பிரியாதிருந்து, மட்பாண்டம் செய்து தளுக்கிடும் வகையைக் கண் டறியும் ஆசை பெருகப் பெருக, இருட்டில் கண்தெரியாதவர்போலத் தடவினார்.

ஆரம்பத்தில் பாண்டத்திற்குப் பூச்சிடும் திரவியம் இன்னதென்று அவருக்கு உறுதி தெரியாமல் உத்தேசம் பிறந்து ஒன்றன்பின் ஒன் ருய்ப் பல திரவியங்களைப் பலவாறு பரிசோதனை செய்துபார்த்தார். பளிங்குபோலத் தளுக்கு உண்டாக்கும்படி அவர் உத்தேசித்த திரவி யம் அனைத்தையும் பொடிசெய்து கலந்து குழைத்துச் சாமானிய மான மட்கலங்களைக் கிரயம் கொடுத்து வாங்கிச் சிறுசிறு துண்டாய் உடைத்து அந்தச் சேர்வையைப் பூசிச் சூளைவைத்துச் சுட்டுப்பார்த் தார். இப்படி ஒன்றன்பின் ஒன்ருக வெகு விதமான கலவை பூசிப் பலவாறு செய்த பரிசோதனை ஒன்றும் பயன்படவில்லை; கிரயம் கொடுத்துப் பாண்டம் வாங்கி வீணுக்கு உடைத்துப் போக்கடித்த தும், விறகும், மருந்தும், காலமும், உழைப்பும் பாழில் செலவழிந் ததுமொழிய மற்றொரு பயனும் இல்லை. இவ்வண்ணம் பிள்ளைகளு டைய வாய்ச்சோற்றையும் அரைத்துணியையும் கொள்ளை கொடுப் பதன்றிப் பயன் சிறிதும் வெளிப்படையாகத் தோன்ருத பரிசோதனை களின் அருமைபெருமை பெண்பாலார்க்குக் கொஞ்சத்தில் விண்டு மனம் ஒப்பாது. பலிஸ்ஸியினுடைய மனைவி தன் கணவனுக்கு முறைமைப்படி எவ்விதத்திலும் ஏற்க நடந்து செய்கடன் தவருது முடித்துவந்தும், அவர் பணத்திற்குப் பாண்டம் வாங்கி வாங்கி வீணாய் உடைத்து எறிவதைக் கண்டு கண்சலித்து, இனிக் கிர

யம் கொடுத்துப் பாண்டம் வாங்கவேண்டாமென்று தடுத்தாள். ஆயினும் அவள் தடையை அவர் கேட்கவில்லை. பளிங்குத்தளுக்கிடும் நுட்பத்தைக் கண்டறியாதுவிடுவதில்லையென்று உறுதியாய்ப் பிடிவாதங்கொண்டிருந்த அவரை ஒருபெண் தன் சொல்வழிப்படுத்தமாட்டுவாளோ? அவருடைய மன உறுதியைத் தளர்விக்கக்கூடாதென்று கண்டு அவள் தடை சொல்வதை அம்மட்டில் நிறுத்திவிட்டாள்.

அன்றுதொட்டுக் காலம் ஏறஏற, பல மாதங்களல்ல, பல வருஷம் அவர் பரிசோதனை செய்துகொண்டுவந்தார். ஆதியில் அந்த ரங்கத்தில் வைத்த சூளை சித்திபெறுமல்போக, அதன்மேல் அவர் வீட்டுக்குப் புறத்தில் நால்வரும் காணப் பகிரங்கமாய் மற்றொரு சூளை வைத்தார். அதில் அவர் எரித்துத் தீர்த்த விறகு, பாழிற் போக்கடித்த திரவியம், உடைத்துக் கெடுத்த பாண்டம், வீணில் கழித்த காலம் இவற்றிற்குக் கணக்கில்லை. இவ்வாறு கையில் உள்ள பொருள் எல்லாம் செலவழிந்துபோக, அவரையும் அவர் குடும்பத்தையும் தரித்திரம் முறைத்துப் பார்த்தது. இதைச் சுட்டி அவர் "இவ்வாறு அபுத்திபூர்வமாய்ச் சில வருஷ காலத்தைப் போக்கி, எடுத்த கருமம் எவ்விதத்திலும் முடியாததை எண்ணி எண்ணித் துக்கசாகரத்தில் மூழ்கி நெட்டுயிர்த்து எப்பொழுதும் அழுத கண்ணும் சிந்தியமூக்குமாயிருந்தேன்" என மொழிந்தார். பரீக்ஷை செய்து ஒழிந்திருக்கையில், அவர் அப்போதப்போது முன் பயின்ற இரண்டொரு தொழிலை அடுத்து ஒருவாறு ஜீவனம்பண்ணுவார். அவர் பயின்ற தொழில் கண்ணுடிக்கு வர்ணம் கொடுத்தல், சித்திரம் எழுதல், நிலம் அளத்தல். இத்தொழில்வகை செய்து தேடிய பணம் சொற்பம்,—செலவிற்குப் பாதிக்குப் பாதியும் காணுது. இப்படித் தட்டுக்கெட்டுத் தடுமாறும் காலத்தில் விறகு விலை உயர்ந்து அரும்பொருளாயிற்று. பரீக்ஷைக்கு அப்பால் வேண்டுமளவிற்கு விறகு வாங்கிச் சூளைவைக்க அவரால் மாளவில்லை. ஆனல் அவர் முன்னிலும் அதிகம் ஓட்டாங்குச்சு வாங்கி முந்நூறு நானூறு துண்டாகத் துண்டித்துக் கூட்டுமருந்து பூசி நாலரை மைல் தூரம் எடுத்துக்கொண்டுபோய்ச் சாதாரணமாய்த் தட்டோடு சுடும் சூளையில் வைத்துச் சுடத்தலைப்பட்டார். நன்ருய் வெந்தபின் எடுப்பித்துப் பார்த்தார்; செய்த பரீக்ஷை ஒன்றும் வாய்க்கவில்லை. அது கண்டு அவர் மனம் கலங்கிற்று. ஏமாறியும், அவர் இளைத்துப் பின்னிடவில்லை; அவ்விடத்திலேயே அவர், இதுவரையிற் போனதெல்லாம் போகட்டும்; இனிப் புதிதாகப் பரீக்ஷைசெய்யத் தொடங்குவோம் எனத் தீர்மானித்தார்.

பின்பு சிறிது காலம் பரீக்ஷையை நிறுத்தி நிலம் அளக்கச் சற்றுத் தூரம் போகும்படி நேரிட்டது. நிலவரி வாங்கும்பொருட்டுச் சர்க்கார் திட்டப்படி, ஸேந்தீஸ் எனும் நகரத்திற்கு அயலில் உள்ள உப்பளம் அளந்து பரப்பு அறியவேண்டியிருந்து, அந்த வேலை

பலிஸ்ஸிக்குப் படிந்தது. உப்பளம் அளந்து பாப்புக்குறித்துப் படம் எழுதி அனுப்ப அவருக்குத் திட்டம் பிறந்தது. அவ்வேலை தொடங்கி முடியச் சிறிது காலம் சென்று அவர் தகுதியான சம்பளம் பெற்றார். வேலை முடித்துக்கொடுத்தபின், அங்கிங்குத் தாமதிக்காமல் முன் உள்ளதற்குப் பின்னும் ஒருபங்கு அதிக ஊக்கத்துடன் அவர் மட்பாண்டத்திற்குப் பளிங்குத் தளுக்கிடும் உபாயத்தை பரிசோதித்தறியத் தொடங்கினார். அதன்பின் அவர் அதற்காகப் பட்டபாடு இவ்வளவவ்வளவென்று சொல்லி முடியாது; கையில் துட்டு இல்லாமல் அல்லாடிய அல்லாட்டம் மிகவும் அதிகம். மருந்துபூசிய பாண்டங்கள் சூளைபோட விறகுக்கு வழியில்லாமல் தோட்டத்துக் கிராதிமரங்களையும் புஸ்தகம் அடுக்கியிருந்த பெட்டி பலகைகளையும் உடைத்துப்போட்டார் என்றால் வேறென்ன சொல்லவேண்டும். இவ்வாறு பாடுபட்ட காலங்களில் ஊணுறக்கமென்பவை அவருக்கு இல்லவேயில்லை.

இவ்வண்ணம் அவர் கிராதிக்கம்பிகளையும் வீட்டு மரச்சாமான்களையும் உடைத்துச் சூளைக்குப் போட்டது கடைசி பரிசோதனையில். அதற்குமுன் அவர் பார்த்த பல பரிசோதனைகளுள் ஒன்றில், சூளையிலிட்ட 300 ஓடுகளில் ஏதோ ஒரு ஓட்டில் கலவை மருந்து உருகிப் பளிங்குநிறம் கொஞ்சம் ஏறியதுகண்டு மிகுந்த சந்தோஷமடைந்து, உடனே மற்றொரு சூளை போட்டார்; அதில் ஒரு ஓட்டிலும் மருந்து பிடிக்கவில்லை. அதன் பின்னும் பலதரம் பார்த்தார், ஒன்றும் கைகூடிவராமற்போயிற்று. ஆயினும் ஊக்கத்தைக் கைவிடாமல், கடைசியில் மருந்து உருகும்படி அதனுடன் வேறு கலப்புச் சேர்க்கவேண்டுமெனத் தேர்ந்து அவ்வண்ணமே கலந்து பூசிச் சூளை போட்டார். அந்தத்தடவைதான் அவர் விறகு அகப்படாமல் வீட்டுச் சாமான்களை எரிக்கத்தலைப்பட்டது. அதுகண்டு அவர் மனைவியும் பிள்ளைகளும் கூக்குரலிட்டு அழுது வெளிப்பட்டு அந்நகரவீதிகளில் பித்தம்கொண்டவர்கள்போல ஓடித்திரிந்து, பலிஸ்ஸி உன்மத்தராகி, வீட்டுத் தட்டுமுட்டுக்களை அடித்துடைத்துச் சூளையில் வைத்தெரிக்கிறாரென்று கூச்சலிட்டார்கள்.

சரியாய் ஒரு மாதம்வரையில் அவர் தரித்த அங்கியைக் களையவேயில்லை; உண்டியும் இல்லை; உறக்கமும் இல்லை. வேர்வை பெருக ஓயாமல் மெய்வருந்தி உழைத்து மெலிந்துபோனார். கடனில் முழுகித் தப்பவகையின்றித் தத்தளித்தார். ஆனாலும் என்ன, அவர் நாடிய பொருள் கைகூடியது. அவர் ஆவலோடு அறிய விரும்பின நுட்பம் அறியப்பெற்றார். விறகு எல்லாம் எரிந்து தீரும் சமயத்தில் சூடேறி முதிர வேகவும் தளுக்குச்சேர்வை உருகியது. அவர் தளுக்குச்சேர்வை பூசிவைத்த பாண்டம் வீட்டில் சாதாரணமாய் வைத்துவழங்கும் ஊதாவர்ணச் சாடி. சூடு ஆறியபின் அச்சாடிகளை எடுத்துப்பார்த்தார். அவற்றின் புறம் பளிங்குபோல மின்னியது.

இந்தப் பெரும்பேற்றைப் பிரத்தியக்ஷமாய்க் கண்டபொழுது அவர் பட்ட நிந்தை, கேட்ட திட்டு, பழிச்சொல் இவை ஒருபொருளாய்த் தோன்றவில்லை. இனித் தமக்கு யோகதசை பெயரும்பொழுது தாம் கண்ட அரிய வித்தையைப் பிரயோகித்துச் சுகம் பெறலா மென்று அவர் ஆறித் தேறியிருந்தார்.

அப்பால் பலிஸ்ஸி குயவன் ஒருவனைச் சம்பளத்திற்கு அமர்த்தி மாதிரி கற்பித்து அம்மாதிரியாக மட்கலம் வனைவித்து, தனுக்கிடும் பொருட்டுத் தாமும் களிமண்ணிற் சிறு பதக்கங்கள் செய்தார். இப் பாண்டமுதலியவைகளைப் பணிக்காய்ச் செய்து விற்குந்தனையும் அவருக்கும் குடும்பத்திற்கும் ஸம்ரக்ஷணைக்கு வழி என்ன? ஸேங் தீஸ் நகரத்தில் பலிஸ்ஸியை நாட்பட அறிந்த சத்திரக்காரன் ஒரு வன் இருந்தான். அந்தப் புண்ணியவான், ஆறு மாசகாலம் அவர் விசாரமற்றுத் தொழில் செய்துகொண்டுவரும்படி, அவருக்கு உண்ண ஆகாரமும் இருக்க வீடும் கொடுத்து உதவச் சம்மதித்தான். பாண்டம் வனைய வைத்துக்கொண்ட குயவனுக்குப் பொருந்தினபடி சம்பளம் கொடுக்கவும் அவரால் மாளவில்லை. வீடு வெறிதாயிருந்தது. தட்டுமுட்டுக்களை உடைத்துச் சூளையில் வைத்து எரித்திட்டது அறி வோமே. அவர் உடுத்த வஸ்திரம்மாத்திரம் மிஞ்சியிருந்தது; அதை உரிந்துகொடுத்திட்டுத் தாம் நிர்வாணமாயிருந்தால் இருக்க லாமேதவிர மற்றப்படி வேறுவழி யில்லை. அறுதியில் அப்படித்தான் செய்தார். அவனுக்குக் கொடுக்கவேண்டிய சம்பளத்தின் ஒரு பா கத்திற்குத் தாம் உடுத்த வஸ்திரங்களிற் சிலவற்றைக் கொடுத்தார்.

அதன்மேல் பலிஸ்ஸி செவ்வையாகச் சூளைக்களம் கட்டி எழு ப்பினர். அதனுள் ஓரிடத்தில் தீத்தட்டிக்கல் அடுக்கிக் கட்டப்பட் டது; அது கடைசியில் படுமோசமாக முடிந்தது. ஏனெனில், சூளையில் நெருப்பு வைத்துச் சூடேறவும், தீக்கல் எல்லாம் சக்கை சக்கையாய்ப் பிளந்து தெறித்துப் பறந்து, சிதறுண்ட துண்டுகள் சூளையில் வெந்த பாண்டங்களில் குத்திப் பாண்டம் எல்லாம் பழு தாய்ப்போயின. ஆயின் தனுக்குமாத்திரம் நன்றாய்ப் படிந்தது. படிந்தும் பயன் என்ன? ஆறுமாசகாலம் உழைத்த உழைப்பெல் லாம் அடியோடே அவலமாய்ப்போயிற்றே. பாண்டம் பழுதாகி யும் தனுக்கு வாய்த்ததனால் சிலர் அவற்றைச் சொற்பவிலை கொடு த்து வாங்க விரும்பினர்கள். பழுதுற்ற பாண்டத்தை விக்கிரயம் செய்வது தமக்கு மானக்கேடென்று பலிஸ்ஸி விற்க உடன்படா மல் தனுக்கேறிய பாண்டம் அனைத்தையும் சின்னபின்னமாகச் சித றடித்தார். இதைச் சுட்டி அவர் சொல்லியதாவது, "ஆசை பெரு கப் பெருகத் தீரம் உண்டாய் எடுத்த கருமத்தைச் சித்தம் சலிக்கா மல் தொடுத்துச் செய்துவந்தேன். இஷ்டர்கள் என்னைக் காண வரும் சமயங்களில் சில வேளை என் இதயம் துன்புற்று வருந்துவ துண்டெனினும், அதை நான் அவர்களுக்குச் சற்றுவது காட்டா

மல் இனியகதை சொல்லிப் பரிவுபண்ணிவருவேன். நான் பட்ட பாடு ஒன்றல்ல, அனேகம். அவற்றுளெல்லாம் தீராப் பெரும் பாடு ஊரார் அயலாராலல்ல, எனக்கு நேர்ந்த நிந்தையும் இடுக்கண் களும் என் வீட்டாராலேயே. நாட்பட உழைத்தும் என் உழைப் பெல்லாம் வியர்த்தமாய்ப்போனதை எண்ணி எண்ணி மிக மனத் துயர் அடைந்து, வீடே தஞ்சமென்று விரைந்தோட, அது முன் பட்ட அவதியிலும் பதின்மடங்கு அதிக அவஸ்தையுள்ள எரிநரகக் குழியாய் இருந்ததென்றால், அவ்வேளையில் என் மனம் என்ன பாடு தான் படாது. இத்தனை பெருந்துயர் அடைந்த நான் அப்பொழு தே மாய்ந்துபோகாமல் இன்றளவும் தப்பிப் பிழைத்திருப்பதை நினைக்கும்பொழுதெல்லாம் எனக்கே ஆச்சரியம் உண்டாகின்றது" என மொழிந்தார்.

காரியம் இந்த நிலையில் இருக்கையில் பலிஸ்ஸிக்கு விசாரம் மேலிட்டு இனித் தாம் நினைத்த கருமம் கைகூடுவது கஷ்டமெனத் துயர் உண்டாயிற்று. அவர் நோயும் பாயுமாய் விழுந்து படாத தொன்றொழிய மற்றொரு சுகத்தையும் அறியவில்லை. அவர் உடல் உதிரம் வற்றி உலர்ந்து வெற்றெலும்புக்கூடாகித் தரித்த வஸ்திரம் கந்தை கந்தையாய்க் கிழிந்து தொங்க, மனதிற் குடியேறிய துக் கம் முகக்குறியால் விளங்க, ஸெந்தீஸின் அயலிலுள்ள வயல் வெளியில் திரிந்தார். அவர் எழுதிய வாலாறுகளில் விநோதமான ஒரு வாக்கியம் இருக்கிறது. அதில் அவர், தமது காலில் ஆடுசதை உலர்ந்து சுருங்கிப்போக, நாடா தொடுத்து இழுத்துக் கட்டிய பாத கோசம் நடக்கும்பொழுது தளர்ந்து குதிக்காலில் விழுந்ததென்று வெளியிட்டார். அவர் குடும்ப சம்ரக்ஷணை விஷயத்தில் விசார மற்றிருப்பதைப்பற்றி வீட்டார் நித்தமும் அவரை நிந்திக்க, அண் டை அயலில் உள்ளவர்கள், சொல்லச் சொல்லக் கேளாமல் பேய்ப் புத்திகொண்டு நடந்ததைத்தொட்டு, இவன் ஆர், லச்சைகெட்ட முட்டாள் என்று திட்டத் தலைப்பட்டார்கள். கேட்டுக் கேட்டு அலுப்புற்று அவர் சிறிது காலம் முன் செய்த தொழிலை மீண்டும் தொடங்கி ஒரு வருஷம் ஊக்கத்துடன் செய்துகொண்டுவந்தார். அதனால் கையேறிய வருமானம் குடும்ப சம்ரக்ஷணைக்குக் கட்டிவந் தது. ஒருவாறு சீர்ப்பட்டாரென்று கண்டு அயலவர்களும் அவ ரைச் சம்மானிக்கத் தொடங்கினார்கள். மீண்டும் அவர் தம் மன திற்கு மாதுரியமாயிருந்த அப்பரீக்ஷையைக் கைக்கொண்டார். முன் னமே தளுக்கிடும் சேர்வை கண்டறிய அவர் பரீக்ஷைசெய்த காலம் பத்து வருஷம். பின்னிட்டு அந்தச் சேர்வையை உறுதிகொண்டு சோதனைமேற் சோதனைசெய்து களங்கமற அறிந்து சாதிக்கப் பின் னும் எட்டு வருஷம் சென்றது. செய்யச் செய்ய அவருக்கு அனு பவம் முதிர்ந்து வியப்பருந்திறமும் அமைந்தது. இன்ன பரீக்ஷைக்கு இன்ன சித்தி உண்டாகுமென்று அவர் எள்ளளவும் தவறாது அறிந்

தார். செய்யும் பரீக்ஷைகள் சிதறச் சிதற, அவருக்கு அனுபவம் முதிர்ந்து நல்லதேர்ச்சி உண்டாயிற்று. தப்பிப்போன பரீக்ஷைகள் அத்தனையும் அவருக்கு நூதனமாய்க் கற்றறியும் அத்தனை பாடங் களுக்குச் சமானமாகி, தனுக்கிடும் சேர்வையின் இயற்கையையும், களிமண்ணின் குணத்தையும், களிமண்ணைப் பதப்படுத்தும் முறை யையும், சூளைவைத்து நிர்வகிக்கும் சூக்ஷமத்தையும்பற்றி அவர் எத்தனை எத்தனையோ நுட்பங்களை அறிந்துகொண்டார்.

பதினறு வருஷம் பாடுபட்டு உழைத்துத் தெளிந்தபின்புதான் பலிஸ்ஸி அச்சமற்றுத் தாமும் குலாலன் என்று சொல்லத் தலைப் பட்டார். அந்தப் பதினறு வருஷமும் அவர் தொழில் பழகின கா லம். அவர் ஆதியோடு அந்தம் தமக்குத் தாமே உபாத்தியாயரா னர். அதன்மேல் அவர் பாண்டம் விற்றுத் தேறும் பணத்தைக் கொண்டு குடும்ப ஸம்ரக்ஷணைசெய்து சுகித்திருக்கத்தக்க நிர்வாகி ஆனர். ஆனலும் தாம் சாதித்தது போதுமென்று அவர் அம் மட்டில் திருப்தியடைந்திராமல் கூடுமளவில் பூரண நிபுணராகக் கருதித் தாம் கையிட்ட துறையில் ஓயாது உழைத்துப் படிப்படி யாய்த் தேறிக்கொண்டுவந்தார். அவர் இயற்கைப்பொருள்களைக் கரு த்துக்கூர்ந்து பார்த்து அணுவளவும் தவருமல் அவற்றின் அழகைப் பாண்டங்களில் அமைக்கப் பயின்ருர். இதில் அவருக்கு உண்டான சித்தியைக் கண்டு, பெயர்பெற்ற பப்பன் பண்டிதர் அவரைச் சுட்டி, "இந்தப் பதார்த்த விஞ்ஞானிக்கு இத்தனை மகத்துவம் தெய்வத்தா லன்றி மற்றப்படி அமைவது அசாத்தியம்" என மொழிந்தார். அவர் வனைந்த சித்திரக்கிண்ணம் முதலியவைகளை விநோதப் பொருட்காட்சிசாலைகளில் இப்பொழுது காண்பவர்கள், இவை கிண் ணங்களல்ல, நவ மணிகளைத் தோற்கடிக்கும் அருமணிகளென்று பாராட்டுவார்கள்; பாராட்டி யானைவிலை குதிரைவிலை கொடுத்து வாங்குவார்கள். சிலவருஷமுந்தி லந்தன் நகரத்தில் மேஸ்தர் பார்நல் தேடிவைத்திருந்த அரும்பொருள் வகை ஏலத்தில் விலைப்பட்ட பொழுது, பலிஸ்ஸி வனைந்த சித்திரக்கிண்ணம் ஒன்றைக் கண்டு எல்லாரும் அதிசயப் பட்டார்கள். குறுக்களவு பன்னிரண்டு அங் குலமுள்ள அதன் மத்தியில் சிறு பல்லியின் பிரதிமை ஒன்று வெகு விந்தையாக அமைத்திருந்தது. அவ்விசித்திரக்கிண்ணம் ஆயிரத்தறு நூற்றிருபது ரூபாய்க்கு விலைப்பட்டதாம்.

அக்கிண்ணம்முதலிய பாண்டங்களுக்கு அணியாக அவர் அமைப்பவை பெரும்பாலும் வனவிலங்கு, பல்லி, அவ்வூர் வயல்வெளியில் உள்ள பூண்டு செடி கொடி இவற்றின் பிரதிமை களே. அவ்வுருக்களுக்கும் அவற்ருல் விளங்கும் ஜீவ மூல வர்க்கத்துக்கும் அணுவளவும் வேற்றுமை தோன்ருதபடி அவை அத்தனை அற்புதமாயிருந்தன.

பலிஸ்ஸிக்கு உண்டான உபத்திரவங்கள் இவ்வளவுமாத்திரமேயல்ல; மத விஷயத்திலும் பலவிதமான ஸங்கடங்கள் நேரிட்டுத் தீயில் தள்ளித் தகித்து விடும்படியாகவும் தீர்ப்புப்பிறந்தது. அப்படிப்பட்ட ஆபத்துவேளையில், அவருடைய திறமைகளைக் கண்டு மெச்சின ஒரு பிரபுவின் செல்வாக்கினால் விடுவிக்கப் பட்டு, அவர் மூலமாய்ப் பாரிஸ்நகரத்து அரசனுடைய தயவும் ஸம்பாதித்து, அவனிடத்தில் உழைத்து ஜீவிக்கலானார். பிரான்சு தேசத்தில் சார்ல்ஸ் ரீட் என்பவர், பலிஸ்ஸி வனைந்த சித்திரப் பிரதிமைகள் சுட்ட உலைக்களம் ஒன்றை இப்போது சிலநாளைக்குமுன் கண்டுபிடித்தனர். மனிதர் முகம், செடி கொடி, விலங்கு ஜாதி இவற்றின் உருமாதிரியாகச் செய்த உருவங்கள் சிலவற்றைத் தரையில் அகழ்ந்தெடுத்தார். அவைகள் சற்றுவது கெட்டுப்போக வில்லை. சாதாரணமாக நால்வரும் அறிந்த அவர் முத்திரை அவைகளுக்கு இட்டிருந்தது. அவ்வுலைக்களம் இருந்தது லூவர் சித்திரக் கூடத்தின்கீழ்.

அவர் மரணபரியந்தம் தம் மனோதைரியம் சற்றுவது இளைக்க வில்லை. அவர் அனுசரித்த மதத்தைத் தள்ளவேண்டுமென்றும், தள்ளாவிடின் கொல்வது நிசமென்றும் துரைத்தனத்தார் அவருக்கு அச்சம் காட்டினார்கள். அந்த அசாத்திய புருஷரை அசைக்க ஆரால் முடியும். முன் பளிங்குத் தளுக்குச் சேர்வை கண்டன்றிப் பரீக்ஷையைக் கைவிடுவதில்லையென்று ஒருபிடியாய் நின்றதுபோலவே மதவிஷயத்திலும் அவர் ஒட்டாரம் கட்டி நின்றார். கடைசியில் மதவிஷயத்திலே தாம் கொண்ட கொள்கையை யார் எவ்வளவு நல் வார்த்தை சொல்லியும் கைவிடாமலே ஒரு வருஷமளவும் சிறையிருந்து வருந்திச் சிறைச்சாலையில் இறந்துபோனார். இந்த மகா புருஷன் நல்ல வீரருக்கு உரிய உழைப்பும், எதற்கும் சலியாத பொறுமையும், கோடாத நேர்மையும் இத்தன்மையனவென நன்றாக நடத்திக்காட்டினார்.

தாய்மார் தம் மக்களைப் பயிற்றுமுறை.

இல்வாழ்க்கைக்கு மக்களைப் பெறுவதைப்போலப் பாக்கியம் வேறில்லை.

> "பெறுமவற்றுள் யாமறிவ தில்லை யறிவறிந்த
> மக்கட்பே றல்ல பிற."

இவ்வுலகத்திலுள்ள குடும்பங்களிலெல்லாம் குழந்தைகள் பிறவாமலேயிருந்துவிட்டால் சிறிதுகாலத்திற்குள்ளே மானிடப்பூண்டேயற்று எல்லாம் பாழ்த்துவிடுமென்பதிற் சந்தேகமில்லை. "தாயிற்

சிறந்தொரு கோயிலுமில்லே," என்றபடி, ஒருவனுக்குத் தாய்தந்தையர் இவ்விருவருள், தாயே முன்னறிதெய்வமாம். ஆதிமுதற்கொண்டே குழந்தைகளை நல்லவழியில் நடத்துவது தாயின் கடமையாம். "தாயைப்போலப் பிள்ளை, நூலைப்போலச் சேலை," என்பது முற்றுமுண்மையே. குழந்தைகளுக்கு நற்குணம் பழகுவதும், துர்க்குணம் பழகுவதும் தாயின் பழக்கத்தினுலேயாம்; இதனுலன்றோ "தாயைப்பார்த்துப் பெண்ணைக் கொள், பாலைப் பார்த்துப் பசுவைக்கொள்" என்கிருர்கள். ஆதலினுல் தாயானவள் தன் மக்களுக்குப் பாலூட்டி வளர்ப்பதுபோலவே, குழந்தைப்பருவந்தொட்டே அவர்களுக்கு நல்லறிவையும் புகட்டவேண்டும். குழந்தைகள் எவ்வளவுக்கெவ்வளவு நற்குண நற்செய்கையுடைய தாய்மார்களால் விவேகமாய் இளமைதொட்டே நடத்தப்படுவார்களோ, அவ்வளவுக்கவ்வளவு அவர்கள் மேன்மைபெற்று வாழ்வார்கள். தாய்க்குத் தன் வீட்டிலுள்ள குழந்தைகளெல்லோரையும் அடக்கி ஆளுவதில் ஸர்வாதிகாரமுமுண்டு.

தாயானவள் பிள்ளைகளை இளமையில் எப்படி நடத்தவேண்டுமோ அப்படித் தவருமல் ஜாக்கிரதையாய் நடத்திவருவாளேயாளுல், அப்பிள்ளைகள் நல்ல ஸ்திதிக்குவருவார்கள். கர்ப்பந்தரித்த நாள்முதல் பிள்ளைபெறுங்காலமளவும், வயா வருத்தம், ஈன்றக்கால் நோவு முதலிய சங்கடங்களை அனுபவிப்பது மாத்திரமேயன்றி, "முன்ன நின்னன்னை முலையூட்டி மையிட்டு மூக்குச்சிந்திக் கன்ன முங்கிள்ளி—," என்றவண்ணமாய்க் குழந்தைபிறந்தபின்பும் இரவும் பகலும் வருந்திப் பாடுபட்டு எடுத்து வளர்ப்பவள் தாயேயாம். "இளங்கன்று பயமறியாது" என்றபடி சிறுவர்கள், நன்மை தீமையென்கிற விவேகமின்றித் தங்கள் மனப்போக்கின்படியெல்லாஞ் செய்வார்களாகையால், அவர்களை நல்லவழியில் திருப்பி நடத்துவதற்கு இளமைப்பருவமே ஏற்றதாகும்.

தம்மக்கள் விஷயத்தில், தாய்செய்யும் நன்மையோடு கூட, ஒருவர்க்கு இருவராய்த் தந்தையும் துணையாய்நின்று நல்லறிவூட்டிளுல் சிறிதும் வீண்போகாமல் பலிக்கும். குழந்தைகளைப் பள்ளிக்கு வைத்தபின்புதான் அவர்களுக்கு அறிவு பயிற்றவேண்டுமென்பதில்லை; எளிதில் பயன்படும்படியான பற்பல விஷயங்களைப் பாலுண்காலமுதற்கொண்டே அவர்களுக்கு நன்ருய்ப்போதிக்கலாம். குழந்தைகளோடு பழகுவதினுல் சிலருக்குள்ள வீண்பிடிவாதமுதலிய துர்க்குணங்கள் நீங்குவதுமுண்டு. இராக்காலங்களில் குழந்தைகளையழைத்துத் தன்னைச் சூழ்ந்திருக்கச்சொல்லி, அறிவுவிருத்திக்கேற்ற பல கதைகளை அவர்களுக்குச் சொல்லவேண்டும். தாய்தந்தையர் தம்மக்கள்மேல் கருத்தாயிருக்கவேண்டும். தந்தை வெளியேபோயிருந்து வீட்டிற்குவரச் சற்றுநேரஞ்சென்ருல், அவன் மக்கள், இன்னும்தந்தை வரவில்லையேயென்று ஏக்கமுற்று அவன் வரவிற்கு எதிர்

பார்த்துக்கொண்டிருக்கும்படி அவன் அவர்கள்மேல் அவ்வளவு அன்பு பாராட்டி வரவேண்டும். தாய்முகங் காணுதபிள்ளையும், மழை முகம் காணுதபயிரும் செவ்வையாகாவாகையால், தாயானவள் தன் மக்களை அன்போடு ஆதரித்துவரவேண்டும். பெற்றேர்க்குத் தம்மக்களுடைய மழலைச்சொல் அமிர்தமாயிருக்குமென்பது நிச்சயம். காக்கைக்கும் தன் குஞ்சு பொன்குஞ்சாம். நன்றாய்ப் பேசத் தெரியாத சிறுகுழந்தைகளின் கருத்தை அவர்களுடைய முகக்குறிப்பினலே ஒருவாறு அறிந்துகொள்ளலாம். சிலவேளைகளில் குழந்தைகள் ஏதேனும் ஒன்றை நினைத்துக்கொண்டு, அதை வெளியே செவ்வையாய்ச்சொல்லத்தெரியாமல் தாய்தந்தையர்களின் முகநோக்கிச் சொல்லும் சிறு குதலையைக்கேட்டு ஆனந்தப்படாதவர் யாவர்?

குழந்தைகளைப் புழுதி, ஈரம், குப்பைமுதலியவற்றில் அலைய விடாமல் கருத்தாய்ப் பார்த்துவரவேண்டும். காலையிலும் மாலையிலும் அந்தந்தப் பருவங்களுக்கேற்றபடி உணவூட்டி, உடையுடுத்தி, வெளியே காற்றுலாவ அழைத்துக்கொண்டுபோய் அவர்களோடு சிரிப்பும் விளையாட்டுமாயிருந்துகொண்டே அவர்களை நல்லவழியில் நடத்தவேண்டும். ஒருவன் தன் குழந்தைகளிடத்தில் எவ்வளவுக்கெவ்வளவு அன்பாயிருப்பானே, அவ்வளவுக்கவ்வளவு அவன் மனையாள் அவனிடத்தில் அன்பாயிருப்பாள். கணவனும் மனைவியும் ஏதேனும் சீறுமாறென்றிருந்தாலும் அதை மாற்றுவது மக்கட்பேரும். பிள்ளைகள் நல்லொழுக்கமுள்ளவர்களாயிருக்கவேண்டுமானுல், மாதாபிதாக்கள் காரணமின்றிக் கோபியாமலும் வேளைக்கொருகுண முள்ளவர்களாயிராமலும், எப்பொழுதும் ஒரு நிலை பற்றி, அவர்களைத் தக்கவண்ணமாய் நடத்தவேண்டும். பெற்றேர் அடியிற்கண்ட விதிகளை அநுஷ்டித்துவந்தால், பெரும்பான்மையாய்ப் பிள்ளைகள் நல்லொழுக்கமுள்ளவர்களாகி, இவ்வுலகில் எல்லோருங் கொண்டாடும்படி பெருமைபெற்று வாழ்ந்திருப்பார்கள்.

குழந்தை அழுகிறதென்கிற காரணத்தினுல்மட்டுமே அதன் மனதின்படியே கேட்டவைகளையெல்லாங் கொடுத்து வழக்கப்படுத்துவது தீது. ஏதாகட்டும், நம்மால் செய்துமுடிக்கத்தக்கதாயிருந்தால் மட்டுமே ஆகுமென்று சொல்லவேண்டுமேயன்றி, ஆகாத காரியத்தைச் செய்துமுடிக்கிறேமென்று சொல்லலாகாது. அடிநாள்முதற் கொண்டே எப்பொழுதும் உண்மைபேசும்படி பிள்ளைகளுக்குப் பழக்கவேண்டும். அற்பகாரியங்களிலும் குழந்தைகள் நமக்குத் துரோகஞ்செய்யாதிருக்கும்படி கருத்தாய்ப் பார்த்துவரவேண்டும்; ஏனெனில், அவர்களுக்கு அந்த வழக்கம் படிந்துவிட்டால் பின்பு பெருமோசஞ்செய்யத் தலைப்படுவார்கள். அவர்கள் வேண்டுமென்று கீழ்ப்படியாதிருந்தால் தண்டியாமல்விடவொண்ணுது. அவ்வாறு சிறுவர்களைத் தண்டிக்கும்போது சிறிதும் பதருமல், சாந்தமும் மனவலிமையுமுடையவர்களாயிருத்தல்வேண்டும்; காரணமின்றிக்

கடிந்துகொள்ளலாகாது. குழந்தைகளோடு அடிக்கடி நச்சுநச்சென்று கடுமொழிகூறலுமாகாது; பயமுறுத்துவதும் குற்றமேயாம். அவர்கள் எப்பொழுதும் சொன்னவண்ணஞ் செய்யவேண்டும்; எதிர்த்துப் பேசும்படி ஒருபொழுதும் இடங்கொடுக்கலாகாது. தீமைசெய்யும்படி இடங்கொடாமலிருக்கவேண்டும்; மக்களுக்குச் சத்துரு மாதாபிதாக்கள் என்பது இப்படிப்பட்டவர்களைப்பற்றியேயாம். ஒருதரம் செய்யலாகாது என்றதை அவர்கள் மீண்டும் செய்ய இடங்கொடாமலிருக்கவேண்டும். அவர்களுக்குப் பகுத்தறிவு உண்டாகத்தக்கவழிகளைக் கையாடவேண்டும். "உண்டு" அல்லது "இல்லை" என்று சொல்லும்பொழுதெல்லாம் நன்றாய்த் தெரிந்துகொண்டதன்மேல் நிதானித்துச்சொல்லும்படி கற்பிக்கவேண்டும்; எல்லோரிடத்திலும் அன்பாயிருக்கும்படி பயிற்றவேண்டும். கோபத்தை அடக்க நன்றாய்ப்பழக்கவேண்டும்; இவ்வுலகத்தில் நடக்குங்கொடுமைகளனைத்தும் கோபத்தினின்றுமே பிறக்கின்றன. எந்த விஷயத்திலும் செட்டும்சீருமாயிருக்கும்படி உணர்த்தவேண்டுமேயல்லாது, தான் தேடாத்தங்கத்துக்கு மாற்றுமில்லை, நிறையுமில்லையென்று, தகப்பன் தேடிவைத்த பொருளையெல்லாம் அழிக்கும்படி விடக்கூடாது. பின்னுக்குப் பயன்படுவனவற்றை நன்றாய் ஆராய்ந்து இளமைதொட்டே போதிக்கவேண்டும். அன்றியும், வரம்புகடந்து செலவழித்துச் சிற்றின்பப்பிரியர்களாயும், அடங்காதவர்களாயும், நாஸ்திகர்களாயும் ஆகாமலிருக்கும்படி சிறுவயதுமுதற்கொண்டே ஏற்றவிதமாக நன்கு உபதேசித்துக்கொண்டு வரவேண்டும். மனதிலொன்று, வாக்கிலொன்று, செய்கையிலொன்றாயிராமல், திரிகரணசுத்தியாயிருக்கும்படி நன்றாய்ப் பயிற்றவேண்டும். பெண்களுக்கு வீட்டுவேலைகள் அனைத்தையும் நன்றாய்ப் பழக்கிவரவேண்டும். ஆண்மக்கள் இதாகிதந்தெரிந்து தங்கள் குடும்பங்களைக் காப்பாற்றிக்கொள்ளும்படி அவர்களுக்கேற்ற தொழிலை முன்னாடியே ஊகித்துக்கொண்டு, பாலியமுதற்கொண்டே கற்றுக்கொடுக்கவேண்டும். விளையும் பயிர் முளையிலே தெரியு மாதலால், தாய்தந்தையர் தம்மக்களுக்கேற்ற தொழில்களை அவர்கள் சிறுவர்களாயிருக்கும்பொழுதே அறிந்துகொள்வதரிதன்று. எப்பொழுதும் நல்ல புஸ்தகங்களையே படிக்கும்படி பயிற்றவேண்டும். நாம் சொல்வதொன்றும் செய்வதொன்றுமாயிராமல் சொன்னவண்ணஞ் செய்தால்மாத்திரமே அவர்களும் அப்படியே சரியாய் நடப்பார்கள். அவர்கள் கையில் பணத்தை அதிகமாகக் கொடுத்துச் செலவழிக்கும்படி விடலாகாது. காலையில் துயிலெழுந்து கை கால் கழுவி, ஸ்நானஞ்செய்து சுசியாயிருந்து, தக்க உணவை அருந்தி, சிறிதும் சோம்பலின்றி எழுதவேண்டியவற்றை எழுதிப் படிக்கவேண்டியவற்றைப் படித்து, பொய், குறளை, வன்சொல் முதலியவற்றைக் கடிந்து புனிதராய், ஓடியுழன்று நன்றாய் வேலைசெய்யும்படி மக்களைப் பயிற்றவேண்டும். பிறரோடு வார்த்தை

சொல்லிக்கொண்டிருக்கும்போது குறுக்கிட்டுப்பேசும்படி சிறிதும் இடங்கொடுக்கவொண்ணுது. செய்வனவற்றைத் திருந்தச்செய்யும்படி பழக்கவேண்டும். வஸ்திரம், புஸ்தகம்முதலியவற்றைச் சுத்தமாய் வைத்திருக்கும்படி பாலியமுதற்கொண்டே கற்றுக்கொடுக்கவேண்டும். சிறந்த பாடசாலைகளிலேவைத்து மக்களைக் கல்வியில் தேர்ந்தவர்களாக்கவேண்டுவதையே தாய்தந்தையர் முக்கியமாகக் கொள்ளவேண்டுமே யல்லாது, "பள்ளிக்கு வைத்திலனே பாதகனே" என்று தம்மக்கள் பிற்காலத்தில் தம்மேல் குறைகூறும்படி ஒருபொழுதும் வைத்துக்கொள்ளலாகாது.

"தந்தை மகற்காற்று நன்றி யவையத்து
முந்தி யிருப்பச் செயல்."

"தம்மில் தம்மக்க ளறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லா மினிது."

"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச்
சான்றே னெனக்கேட்ட தாய்."

உண்மைதவருத உத்தமராஜன் கதை.

அரிச்சந்திரன் விசுவாமித்திரமுனிவரிடம் அயோத்தியையும், அந்த ராஜ்யத்தில் மற்றுமுள்ள எல்லாவற்றையும் ஒப்புவித்துவிட்டுச் சந்திரமதிதேவியோடும், குழந்தை ரோகிதாசுவனேடும் காசிமாநகர் நோக்கிச் சென்றான் என முன்சொல்லியிருக்கிறேமே. அவன் அவ்வாறு செல்லும்பொழுது, மறையவன் பொருட்டு நாட்டைக் கொடுத்ததனல் மனம் இன்புறுகின்றது; விதிவசத்தால் இன்னும் கொடுக்கப்படாமலிருக்கிற மிகுந்ததக்ஷிணையைப்பற்றி நினைக்கையில் மட்டின்றி மனம் வாடுகின்றது. இவருடைய நாட்டிலிருந்து தனமோ தேடத்தக்கதன்று; ஆதலினல், காசிமாநகரை இம்மண்ணகரோடு சேர்ந்ததல்லவென்று பெரியோர் மொழிந்திருக்கின்றமையால் அவ்வாராணஸிக்கே செல்லுகின்றேன். மனைவி, புதல்வன், நான், ஆகிய இம்மூவர்தாம் மிச்சம். அருந்தவனுக்குச் சொன்ன தவணை கிட்டி விட்டது; வாய்மையோ விடவொண்ணுது; முனிவரோ கோபிஷ்டர்; வேதியன் கடனைக்கொடாமல் உயிரைத் துறக்கவும் மனம் துணியவில்லை; இதற்கு என்செய்வேனென்று தியங்கிநிற்கையில், தூரத்திலே வாராணஸி கண்ணிற்குப் புலப்பட்டது. அம்மாநகரை நோக்கிக் கும்பிட்டு அவன், முனிவர் கடனை எவ்வாறு இறுக்கப்போகிறேனே அறிகிலேன்; யாரையேனும் ஜயித்துப் பொருள்கொள்ளலாமென்றாலும், திருநீக்கப்பட்டவனுகிய எனக்கு இனி வெற்றியாலாவதென்ன? அந்தணர்க்குச் சாதாரணமான இரக்கும் தொழிலைக் கையாடலாமோவெனின், க்ஷத்திரியகுலத்தில் பிறந்தவன் அவ்வாறு ஏற்பது முறையன்று; வாணிபஞ் செய்யலாமோவென்றால் அதற்கு முதல் வேண்டும், என்னிடத்திலோ பொருள் சிறிதுமில்லை; பாவி நான்

இதற்கு என்னசெய்வேன்; நல்லது இருக்கட்டும்; என்னை விற்றுச் சாசுவத மான ஸத்தியத்தைக் காப்பாற்றுகிறேன்; அந்தஸத்தியம் காப்பாற்றப்படாதாயின், இம்மை மறுமை இரண்டின்பயனையும் ஒருங்கேயிழப்பது திண்ணம் என்றுதேர்ந்து, குழந்தை ரோகிதாசுவனைச் சமாதானம்பண்ணிக்கொண்டும், கடுவழி நடப்பதனல் களைப்புற்றுமிருக்கிற சந்திரமதிதேவி இங்குவந்து சேர்வதற்குமுன்பேதானே விரைவில் என்னைவிற்று என் கருத்தை நிறைவேற்றிக்கொள்ளவேண்டு மென்று நிச்சயித்துக்கொண்டு, உயர அண்ணாந்து பார்த்தான். பார்க்கையில் நடுப்பகலானது கண்டு, கோசிகனுரைப்போலவே சூரியனும் கோபங்கொண்டு வெகு கொடுமையாய்த் தவிக்கிருன். என் மனம் போலவே வழியெல்லாம் நெருப்பாயெரிகின்றது. நடுப்பகலாகின்றமையால் நிழல் வரவரக் குன்றி அடியிலுறைகின்றது; வெயிலின் கொடுமையால் என் பேதைச் சந்திரமதி அயர்ந்து வேர்த்துவிடாய்த்துப் பஞ்சைபோல் மரத்தடிநிழலில் உட்காந்திருக்கிருள். இப்பொழுது முனிவர்க்குப் பொன் கொடுக்கும் அவதியும் கிட்டிவந்துவிட்டது; எனக்கும் முடிவு கிட்டி வந்துவிட்டதென்றுதான் எண்ணவேண்டும். ஐயோ பாவி கெட்டேனே யென்று மூர்ச்சை போய் நிலத்தில்வீழ்ந்தான். சற்றுத் தெளிந்ததும் எழுந்திருந்து விசாரத்தோடு தன்னைத்தானே நோக்கி, அடகெடுவாய், அரிச்சந்திரா! பார்ப்பனச் சிரேட்டனுக்கு வாக்களித்தபடி தக்ஷிணையைக் கொடாமுன் ஸத்தியத்தினின்று நழுவி எந்நாடு தேடியடா போகின்ருய்? என்று சொல்லி வெறுத்துப் பிறகு, நான் வணிகர் வீதிக்குச்சென்று அங்குச் செய்யவேண்டியதைச் செய்கிறேன்; அருந்தவமுனியும் அங்கேதான் வந்திருப்பாரென்று காசிநகரில்புகுந்து அங்கோரிடத்திலிருந்தான்.

கைம்மேற்கிடைத்த மூன்று வித்தைகளும் அரிச்சந்திரன் செய்த இடையூறுகளால் சிதைவுற்றமையால், விசுவாமித்திரர் வெஞ்சினங்கொண்டு, சொன்ன அவதிப்படி திடீரென்று அங்குவந்து நின்ருர். அவன் அம்முனிவரைக்கண்டு கிட்டிச்செல்லுமுன்பே அவர் சீறிச்சினந்து, எனக்குச் சொன்னவண்ணம் நீ இன்னுமேன் தக்ஷிணை கொணர்ந்துகொடுக்கவில்லையென்று அதட்ட, வேந்தர் பெருமான், ஐயனே, உமக்கு வந்தனம்; என்னை மன்னித்தருளவேண்டுமென, கோசிகர் மிகக் கோபங்கொண்டு, அட பாவி! இன்னுங்கூட மதுரம்போலப் பொய்ம்மொழிகூறி என்னை வஞ்சிக்கப்பார்க்கிருயோவென்று கோபிக்க, அம்மன்னவன் இம்மாற்றங் கேட்கப்பொருது, தன் இருசெவியையும் கையால்மூடிக்கொண்டு, அடிகளே! பொறுத்தருளவேண்டுமென, அந்நீத்தோன் முன்னிலும் மிக்க சினங்கொண்டு, அட துராத்துமாவே! தவணை யாய்விடுகிறதென்ருலும், இன்னும் நீ எனக்குச் செய்த தானங் கொடுத்தாயில்லை; உன் வாக்குமாத்திரம் மதுபோல் இனித்திருக்கிறது; இந்தச் சாபாக்கினியானது இப்பொழுது உன்மேல் விழற்பாலதென்று சாபமிடுவதற்காகத் தண்ணீரைக் கையிலள்ளினர். அதுகண்டு அரிச்சந்திரன் வெந்து உருகிப் பரபரப்புடன் அத்தவமுனியின் திருவடிகளிலே வீழ்ந்து தண்டனிட்டு, ஆண்டவனே! சற்றுப் பொறுத்தருள்வீராக; இன்று பொழுதுபடுமுன்னே தேவரீர் தக்ஷிணையைப் பெற்றுக்கொள்ளாவிடிலன்ருே, நான் உம்மால் சபிக்கப்படுவதற்கும், வதைக்கப்படுவதற்கும் ஆளாகவேண்டும். அடியேன்மீது அருள்புரிந்து, இந்நகர் வணிகர் வீதிமட்டும் அடியேன் பின்னேடு எழுந்தருளவேண்டுகிறேனென, அவ்வருந்தவமாமுனி வாய்பேசாது சாபஜலத்தை

உபசம்ஹாரம்பண்ணிக்கொண்டு, நல்லது, நான் இரண்டாந்தரம் நீராடிப் பகற்கடன் கழித்துவிட்டு வருவதற்குள்ளே நீ அங்கேபோய்ப் பொன் சேகரித்துக் கொணர்ந்துவைத்திருக்கவேண்டுமென்று சொல்லிப் போய் விட்டார்.

அரிச்சந்திரன் அவ்விடம்விட்டு வணிகர்வீதிக்குச் செல்லுகையில், சீச்சீ, கடன்படுவதிலும் கொடிது வேறொன்றுமில்லை; கடன்படுதலானது இம்மை மறுமை இவையிரண்டிலும் நீங்காத பெருங்கேட்டை விளைவிக் கத்தக்கது; அதின் பரிணமம் மகா கோரமானது; எவன் தனிகனுடைய சினமுகத்தைப் பாராமலிருப்பானோ, அவனே மூவுலகத்திலும் மேலான புருஷன் என்று தன்னுள்ளே ஆராய்ந்தறிந்துகொண்டு, கடைத்தெருவுக் குட்சென்று ஒரு துரும்பையெடுத்துத் தன் தலைமேல் வைத்துக்கொண்டு, பெரியோரே! எதோ ஒருகாரியத்தினிமித்தம் வேறு விதியின்மையால் நான் என்னை லக்ஷம்பொன்னிற்கு விலைகூறி விற்றுக்கொள்ளுகிறேன்; ஆதலி னால், என்னை விலைக்குக் கொள்ளுங்கள், கொள்ளுங்கள் என்று வாய்ப் பறையாகவும் நாக்கடிப்பாகவும் சாற்றினான்.

இவ்வண்ணம் அரிச்சந்திரன் தன்னைத்தானே விலைகூற, அங்குள்ளார் அய்ய! யாதுகாரணத்தால் இக்கொடுந்தொழில் செய்யப்புகுந்தாய்? இத் துணைநிர்ப்பந்தம் என்னோவென்று ஆச்சரியப்பட்டு வினவ, அவன், இவ்வுல கில் என்னென்னவோ விசித்திரங்கள் நடக்கின்றனவென்றான். பின்பு அங் கிருந்து வேறிடஞ்செல்லக்கருதிச் சிறிதுதூரம்போய், அங்கும் முன் மொழிந்தபடியே மொழிய, அவ்விடமிருந்தோர் அவனை நோக்கி, உன் திற னெப்படி? நீ செய்யும் தொழிலென்ன? உனக்கென்ன தெரியும் என்று பலவாறாக வினவினார்கள். அது கேட்ட அரசன் சிறுநகைசெய்து, ஐயன் மீர்! நீங்கள் என்னை என்னென்ன பணி செய்யச்சொல்லினும் அவற்றை யெல்லாம் எதிர்பேசாது செய்வேன்; ஆண்டானிட்ட தொழிலைச் செய்வ தன்றோ அடிமைக்கழகு என்றுசொல்ல, அவர்கள், நீ அதிகவிலை கூறுகிறாய், வேறுவிலையொன்று தணித்துச்சொல்லென்றனர். நாங்கள் க்ஷத்திரியர்; அடிக் கடி எங்களுக்கு வேறுவேறுவிலை சொல்லத்தெரியாது என்று அரசன் மொ ழிய; அப்படியானால் நீ எங்கட்கு வேண்டாம் போகலாமென்றனர். அம் மன்னர் பெருமான் மீண்டும் வேறோரிடத்திற்குச் சென்று, முற்கூறிய வண்ணமே கூறிக்கொண்டிருந்தான். அப்பொழுது சந்திரமதிதேவி தன் உடல்சோர நடைசோரச் செம்பஞ்சிட்டிருந்த அம்புஜத்தாள் கெஞ்சக் கெஞ்சத் தட்டித் தள்ளாடிக் குழந்தை ரோகிதாசுவனையும் அழைத்துக்கொ ண்டு அங்கு விரைந்துவந்து அரசனை நோக்கி, ஸ்வாமீ! நீர் இவ்வாறு உமது பாட்டைமட்டும் பார்த்துக்கொண்டு அறஞ்செய்யப்புகுவது தர்ம மோ? நான் உமக்கு என்னபொல்லாங்கு இழைத்தேன்? என்மீதருள்புரிந்து என்னையும் இவ்வறஞ்செய்வதில் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று இருகண் களிலும் நீர்பெருக உரைத்து, பின்பு அங்குள்ளாரை நோக்கி, ஐயன்மீர்! இவ்விலையில் பாதிக்கு என்னைக் கொள்ளுங்கள்; அவ்வாறு நீங்கள் என்னை விலைக்குக்கொள்ளுதல் எனக்குச் சம்மதமே என்றாள். அப்பொழுது அரு கே நின்ற பாலகன் என்னையும் விலைக்குக் கொள்ளுங்களென்று சொன் னான். இவற்றையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த அரசன் அழலிலிட்ட இழுதுபோலுருகி, ஓகோ, கொடிது, கொடிது! புல்நுனிமேல் நீர்போல நிலையற்றதாகிய செல்வத்தையெல்லாம் சிறிதேனும் துன்பமுறாது துறந்து

விட்டேன்; இருவிழியும் நீர்வார முகஞ்சோர்ந்து உடன்வந்த சுற்றத்தாரையெல்லாம்விட்டு வந்துவிட்டேன்; பற்றுள்ள நாட்டாரைத் தேற்ருதே வந்துவிட்டேன். இப்பொழுது கொண்ட மனையாளும், அருமைமைந்தனும் என் பொருட்டு விற்றுக்கொள்ளப்படுவதைக் கண்டும், பாவியேன் பல கூருய்ப் பொடிப்பொடியாகி மாயாமையினுல் இவ்வுடல் வஜ்ரத்தினுல் செய்யப்பட்டிருக்கவேண்டு மென்று தன்னுள்ளே நினைந்து நொந்துருகினுன்.

சந்திரமதி அவ்வாறு கடைத்தெருவில் தன்னைத்தானே விலைகூற, அங்குள்ளோர் அப்பெண்மணியை நோக்கி, மாதே! நீ கொண்டசமயமென்னவென, அவள், ஐயன்மீர்! கொண்டானையல்லாமல் மற்ருெருவர்க்கும் வழிபாடு செய்யாமை, அயற்புருஷனுண்ட மிச்சிலைப்புசியாமை இவ்விரண்டினைமட்டுந் தவிர்த்து, வேறென்ன செய்யச்சொல்லினுஞ் செய்வேன்; இதுவே என் சமயமென்ருள். அங்கிருந்தோர் அவள் அவ்வாறு கூறக்கேட்டு, இந்நியமமுள்ள மாதைப் பெரும்விலைகொடுத்து வாங்கிப் பயனென்னவென்று சொல்ல, அவள், ஆம், நீங்கள் சொல்வது உசிதமே, மெலிந்தோரிடத்து இரக்கமுள்ள யாரேனும் ஸாதுவான பிராமணர்தாம் என்னை விலைக்குக் கொள்ளவேண்டுமென்று சொல்லி அவ்விடம்விட்டு வேறிடஞ் சென்ருள். காசிமாநகரத்தில் உபாத்தியாயராயிருந்த அந்தணர் ஒருவர், ஒரு பெண் விலைப்படுகிருளென்று கேள்வியுற்று, அவளைத் தன் மனையாளுக்குத் துணையாய் வீட்டு வேலைசெய்வதற்காக வாங்கவேண்டுமென்று, பொற்குவையை வாரிக்கொண்டு தமது சிஷ்யனுகிய கவுண்டினியனேடு வணிகர்வீதி நோக்கிச் சென்ருர்.

அவரோடுகூட வந்த மாணுக்கனுகிய கௌண்டின்னியன் அங்கிருந்த ஓர் கும்பலைக் கண்டு, ஸ்வாமி! அப்பெண்மணி இவ்விடத்திலிருப்பாளென்று அவரை அங்கே அழைத்துக்கொண்டுபோய்விட, அவர் அவ்விடத்தில் ஒரு மாது தன்னைத்தானே விலைகூறி விற்பதைக்கண்டு, அம்மா நீ கொண்ட சமய மென்னவென, அவள், மறையோரே! அயல்புருஷனை ஆதரித்தல், அயல்புருஷன் உண்ட மிகுதியை உண்பது இவ்விரண்டும் நீங்கலாக மற்றப்படி எதைச் செய்யச்சொன்னுலும் செய்ய உடன்பட்டிருக்கிறேன் என்ருள். அவ்வந்தணர் அக்கிளிமொழியாளைக்கண்டு பேருவகைகொண்டு, தாயே! நீ கொண்டிருக்கும் ஸமயம் நன்று நன்று; எனது இல்லாள் அக்கினி பரிசாரிகையாயிருப்பதினுல், அவளுக்கு என் கிரகத்திலுள்ள வேலைகளைப் பொறுத்துப்பார்க்கத் திறனில்லை; பெண்ணே! உனக்குரிய பொன்னை வாங்கிக் கொள்ளலாமென, அவள் இது நல்ல வேளைதான் என்று களிப்புடன், பெரியோரே! அநுக்கிரகிக்கப்பட்டேன்; ஏவலாமென்ருள். அவ்வந்தணர் அருந்ததிபோன்ற அப்பெண்ணரிசியின் பெருங்குணத்தைக்கண்டு வியப்புற்று, இம்மடமாது உயர்குடியிற் பிறந்த உத்தமியாகவே யிருத்தல்வேண்டும் என்பதில் சிறிதேனு மையமில்லை; இம்மடந்தைக்கு இவ்வாறு பொல்லாங்கு நேர்ந்திருப்பது உசிதமேயன்று; இக்கொடுமைக்கு யாது காரணமோ அறியேனென்று தன்னுள்ளே நினைத்துச் சந்திரமதியை நோக்கி, பெண்ணே! உன் கொழுநன் உயிரோடிருக்கிருனேவென, அவ்வுத்தமி ஆமென்று அருகே நின்ற தன் காதலனைச் சிறிது நோக்கிச் சிரக்கம்பஞ் செய்துகாட்டினுள். ஸமீபத்திலிருந்த அரிச்சந்திரன், தான் உயிரோடிருக்கையிலேதானே இல்லாள் இக்கோலங்

காணநேரிட்டதேயென்று பெருமூச்செறிந்தான். அவ்வுபாத்தியாயர் மீண்டும் அவளை நோக்கி, பெண்ணே! கொழுநன் ஸமீபத்திலிருக்கிறுனே என, சந்திரமதி இருகண்களிலும் நீர் பெருகத் தன் காதலனைப் பார்த்தாள். அந்தப் பிராமணர் அங்குநின்ற அரசனது வடிவழகைக் கண்டு நெஞ்சுருகி, அந்தோ! இந்த மகா புருஷனுக்கு இந்தக்கதி வருவது தருமமோ! சக்கரவர்த்தியிலக்கணம் முற்றுமமைந்திருக்கப்பெற்ற இவ்வுத்தம புருஷன் இப்பொழுது தலையில் முடியின்றி, பிரமாணஞ்செய்து தன்னை விலைகூறிவிற்பதற்காகத் தலையில் துரும்பையெடுத்து வைத்துக்கொண்டிருக்கிறுனே; இதென்ன விதிப்பயனே அறிகிலேனென்று அரசனை நோக்கி, அப்பா உனக்கேன் இத்தனை பெரும்பொல்லாங்கு நேர்ந்ததென்றுர். அரசன், அவ்வேதியர் தனது க்ஷேமத்தை நாடி அவ்வாறு கேட்டதினுல் விடைகூறுதிருப்பது நன்றல்லவென்றெண்ணி, அஹோஸாது! இது விஷயத்தைப்பற்றி விரித்துரைப்பதற்குப் பொழுதில்லையாதலால், சுருங்கச் சொல்லுகிறேன் கேட்பீராக: பிராமணன் கடனை இறுத்தற்பொருட்டு இவ்வாறு செய்யப்புகுந்தேன்; இவ்வளவுக்கு மேற்பட்டு என்னை இது விஷயத்தில் தேவரீர் கேட்பது உசிதமல்லவென்றுன். அதற்கு அவ்வேதியர், அப்படியானுல், அப்பா! பொன் இதோ வாங்கிக்கொள் என, அரசன், அம்மாற்றஞ் செவியுறப்பொருது, காதைக் கெட்டியாய்ப் பொத்திக்கொண்டு, ஓ ஸாது! முதல்வருணத்தாருக்குரிய இத்தொழிலானது என்போலார்க்கு ஏலாது; ஆதலினுல், தேவரீர்க்கு என்மீது உள்ளன்பு இருப்பது மெய்யாயின், என்னை அடிமைகொண்டு அதற்குக் கிரயமாகக்கொடுத்தல் வேண்டுமென்று கூற, கூடநின்ற சந்திரமதிதேவி அம்மறையோனை நோக்கி, ஸ்வாமி! முந்தி வந்திருக்கிற என்னை வேண்டாமென்று விலக்கலாகாது; ஆதலினுல், உம்மைச் சரணமடைந்த என்னை நீர் அநுக்கிரகிக்க வேண்டுமென்றுள். அச் செந்தீவளர்ப்பவர் இந்தத் துக்கங்கண்டு ஆற்றப்பொருமல் கண்ணீர்ததும்ப, என் தாயே! இந்த அரைலக்ஷம் பொன்னையும் உங்கட்குக் கொடுத்திருக்கிறேன்; இது உங்களிருவர்க்குமுரியதே; தம்பதிகளாகிய உங்களுக்குள்ள ஒற்றுமைநயத்தால் இருவருள் யாராயினுஞ் சிறிதுங் குற்றமேயில்லை; பொன்னைப் பிடியென்று கொடுக்க, அதைச் சந்திரமதி ஸந்தோஷமாக வாங்கிக்கொண்டு, தெய்வாதீனம்; ஆரியபுத்திரர் பண்ணின பிரதிக்கினையில்பாதியை இப்பொழுது நிறைவேற்றினவளாயினேனுதலால் யான் பயன்பெற்றேனென்றுள். இத்துக்கத்தை அங்குநின்று கண்கொண்டு பார்க்கக்கூடாமையால், அவ்வந்தணர் அவ்விடம்விட்டுப் போகும்படி முயல, சந்திரமதிதேவி அவரை நோக்கி, ஐயனே! ஒரு முகூர்த்தமளவும் தேவரீர் பொறுத்தருளவேண்டும்; அதற்குள் ஆரியபுத்திரரை ஒருதரம் பார்த்துவிட்டு உமதுபின்னேடு வந்துவிடுகிறேன் என, அவர், அம்மா! இங்கிருந்து உன்னை என் கிரகத்துக்கு அழைத்துக்கொண்டுவரும்படி இந்தக் கௌண்டின்னியனை வைத்துவிட்டுப் போகிறேனென்று போய்விட்டார். சந்திரமதி அப்பொன்னை யெடுத்துக்கொண்டு அரசனுடைய உத்தரீயத்தில் முடிந்து, பிராணநாதா! இவ்வேதியரிடம் நானிருந்து அடிமை செய்யும்படி எனக்கு அநுமதிகொடுக்கவேண்டுமென, அரசன் சிந்தை சோர்ந்து, இது தெய்வத்துக்குத்தான் சம்மதமாமோவென்று மனம்புழுங்கி ஆகாயத்தை அண்ணாந்துபார்த்து, தெய்வமே! இக்கற்புடைய நல்லாள் ராஜமஹிஷியாயிருந்தமையையிழந்து இப்போது அயல்வீட்டில் தொண்டு

செய்யும்படியிருக்கிறதைப் பார்க்கையில், முடியாபரணத்தைக் கழற்றி அடியில் தரிப்பதுபோலிருக்கின்றதேயன்றி வேறன்று. ஊழின் கொடுமையால் மதிமயங்கி இப்பொழுது பிள்ளை பெண்டிர் விலைப்படுவதைப் பார்ப்பதினால், தன் குலத்துக்கு வரும் அவமானத்தைச் சூரியன் காணப்பொறாது ஒளிமழுங்கிவிட்டான்போலு மென்று நெஞ்சுருகி, மீண்டும் ஒருவாறு திடன்கொண்டு, என் ஆருயிர்க்காதலியே! மாணுக்கனோடிருக்கிற மறையவனை நீ பூசிக்கவேண்டும்; அன்றியும், அவரது இல்லாளுக்கு ஏற்றபடி அவளை உபசரித்து அவளுடைய பிரீதிக்குப் பாத்திரமாயிருக்க வேண்டும்; பாலகனைப் பத்திரமாய்ப்பார்த்துப் பரிபாலனஞ்செய்யவேண்டும்; தெய்வகதிக்குட்பட்டு எப்போதும் விதிவலிதென்றிருத்தல்வேண்டு மென்று பலவாருகப் புத்திசொன்னான். கூட நின்றுகொண்டிருந்த கௌண்டின்னியன் நேரமாயிற்றென்று வெகுண்டு, அம்மா! உபாத்தியாயர் வெகுதூரம் போய்விட்டாரே, வா, வா, நாமும் போவோ மென, சந்திரமதி, அப்பா துரையே! சற்றுநேரம் பொறுத்துக்கொள்; என்னுருயிர்க்காதலனைச் சற்றுப் பார்த்துவிட்டு உன் பின்னோடு ஓடிவருகிறேன் என்றாள். அதற்கு அரிச்சந்திரன், பெண் பேதாய்! நீ மீண்டும் என்னோடு வார்த்தை சொல்லவந்ததுபோதும்; இந்தப் பிரம்மசாரி கோபித்துக்கொள்ளுகிறார்போ என்றான். அவள் மறையவனிடம் போகப் புறப்படவே, பாலகனாகிய ரோகிதாசுவன் தன் தந்தைமுகத்தை நோக்கி, ஐயனே! அன்னையார் எங்கே போகிறாரென, அரசன் நெஞ்சந்தடுமாறி, இப்பாவியை மணந்து என் பேதை இக்கோலமாயினளே யென்று தன் விதிப்பயனை நினைத்துக்கொண்டு, அடா என் செல்வமகனே! அன்னை எங்கே போகிறாளோ அங்கேயே நீயுங் கூடப்போ என் கண்ணேயென்று கனைந்துரைத்தான். அக்குழந்தை பிரம்மசாரியைப்பார்த்து, ஓ பிரம்மசாரி, என் அன்னையாரை எங்கேயடா அழைத்துக்கொண்டுபோகப் பார்க்கிறாய் என்று சினந்து தன் தாயின் முன்றானையைப் பற்றியிழுக்க, கௌண்டின்னியன் சீறிச் சினந்து, முளைக்கிற முளையில் அடிமைப்பட்டவனே! எட்டி நில்லென்று பாலகனைப் பிடித்துத் தள்ளினான். இவற்றையெல்லாம் பார்த்துப் புண்பட்ட நெஞ்சினளாகிய சந்திரமதிதேவியானவள், துன்பப்பட்டது போதுமென்றெண்ணித் தன் கணவனை நோக்கி, பாவியேன்பொருட்டுத் துக்கப்பட்டதுபோதும்; மஹரிஷியின் காரியத்தைக் கெடுத்துவிடவேண்டாமென்று சொல்லிவிட்டுக் குழந்தை ரோகிதாசுவனைத் தன் பின்னோடழைத்துக்கொண்டு கௌண்டின்னியனுடன்சென்றாள். அரசன் அத்துயரத்தைச் சிறிதும் ஆற்றாது நினைவழிந்து நிலத்தில் வீழ்ந்தான்.

பகற்கடன் கழிக்கப்போயிருந்த விசுவாமித்திரர் அதற்குள் அங்கு வந்து, அடா! எனக்குள்ள தக்ஷிணைப்பொன்னை ஏன் இன்னுந் தேடிக் கொண்டுவந்து கொடுக்கவில்லையென்று ஒருவாறு அதட்டினார். அரசன் அது கேட்டு, மூர்ச்சைதெளிந்தெழுந்து, ஸ்வாமி, தக்ஷிணையில் பாதிப்பொன்னை வாங்கிக்கொள்ளலா மென, சண்டகௌசிகனார், அரிச்சந்திரா! நீ எனக்குப் பாதிப்பொன் கொடுக்கவந்தது போதும்; நீ வாக்களித்தபடி எனக்குத் தனங்கொடுக்கவேண்டியது மெய்யாயின் மிச்சம் சிறிதுமின்றி முழுதுந்தான் கொடுத்தல் வேண்டும் என்றார்.

ஆகாயமார்க்கமாய் விமானத்திலேறி இவ்வதிசயத்தைக் கண்ணுறும்படி அங்கு வந்திருந்த விசுவேதேவர்கள் இக்கொடுமையைக் கண்டு சகி

யாமல், இதென்ன தவம்! விரதம்! ஞானம்! அரிச்சந்திரனை இக்கோலங் கண்டீரே என்று நிந்தித்ததைக் கோசிகனர் கேட்டு, உயர நிமிர்ந்து நோக்கி, அவ்வாறு தம்மை நோக்கிக் கூறியவர்கள் விசுவேதேவர்களென்று கண்டு கோபமூண்டு அவர்களைச் சபிப்பதற்காகத் தமது கமண்டலத்தினின்றும் சாபஜலமள்ளி, தம்மைத்தாமே அறிந்துகொள்ளாமல் கொடியவனுகிக் கடைப்பட்ட க்ஷத்திரியனிடத்தில் பக்ஷபாதமுள்ள விசுவேதேவர்களே! நீங்கள் அனைவரும் க்ஷத்திரிய யோனியில் பிறக்கக்கடவீர்களாக; அன்றியும், பிராமணனுகிய துரோணுசாரியன் புதல்வனுன அசுவத்தாமாவினுல் வதைக்கப்படுவீர்களாகவென்று சாபமிட, அவர்கள் அக்கணமே அக்கொடிய சாபத்தினுல் விண்ணின்று மண்ணுலகிற் குப்புறவீழ்ந்துவிட்டார்கள். இவையனைத்தையுங் கண்கூடாய்ப் பார்த்துக்கொண்டிருந்த அரிச்சந்திரன் அச்சமுற்று, இவையெல்லாம் தவத்தின் பெருமையென்றறிந்து, அம்முனிவனை நோக்கி, ஆண்டவனே! உமக்குத் தக்ஷிணைப்பொன்தரவில்லை யென்கிற துக்கம் எனக்கு இவ்வளவவ்வளவன்று; ஆதலினுல் நீர் என் விஷயத்தில் வேறு செய்யாதிருத்தல்வேண்டும்; தாரமும், தனயனும் விலைப்பட்டதனுல் கிடைத்த பொன் ஐம்பதினுயிரத்தையும் பெற்றுக் கொள்வீராக; மற்றப் பாதியையும் நான் சண்டாளனுக்கடிமைப்பட்டாயினும் உமக்குத் தருகிறேன் என, கோசிகனர் கதங்கொண்டு, நீ எனக்குப் பாதிப்பணம் தக்ஷிணைகொடுக்கவந்தது போதும்; சிறிதாயினும் சேஷமின்றி முழுமையையும் கொடுத்தல்வேண்டுமென்று கண்டித்தார்.

தென்புலத்தார் கோவாகிய தர்மராஜன், அரிச்சந்திரன் கொண்டிருக்கும் ஸத்திய விரதத்தைப் பரீக்ஷிக்குமாறு அப்பொழுது சண்டாள வடிவமெடுத்து, தன் பின்னேடு தூதன் ஒருவன் தன்னைப்போலவே மாறுவேடம் பூண்டு ஒரு பெட்டி நிறையப் பொன்னை யெடுத்துக்கொண்டு பின் தொடர்ந்து செல்ல, அரிச்சந்திரன் காசிநகர்க் கடைவீதியில் தன்னை விலைகூறி விற்குமிடத்திற்கு வந்தான்.

அவ்வேளையில் அரிச்சந்திரன், மாமுனிவர் கடனுக்காக முன்போலவே தன்னை மீண்டும் விலைகூறியும் ஒருவனும் வாங்காததினுலும், சொன்ன தவணை கழிந்துவிடுவதனுலும், அந்தோ கெட்டேனே என்று கதறி நிலத்தில் வீழ்ந்தான். இவை அனைத்தையும் நேர்நின்று பார்த்த யமதர்மராஜன் அதிசயித்து, அந்த மகாபுருஷன் சோகமுற்றுப் புவியில் வீழ்ந்து கிடக்கிறதைக் கண்டு அவனைக் கிட்டிச்சென்று, அப்பா! எழுந்திரு, எழுந்திரு; நீ கேட்டபடி உனக்குப் பொன் கொடுத்து உன்னை வாங்குவதற்பொருட்டாகவே நானிங்கு வந்திருக்கிறேன்; ஆதலினுல், நீ கேட்டபடி பொன்னை வாங்கிக்கொள்ளலாமென்றுன். அரசன்செவியில் இம்மாற்றம்படவே, அவன் மூர்ச்சைதெளிந்து அவனைப் பார்ப்பதற்கு முன்பே, ஓ ஸாதுவே, பொன்னைக் கொண்டுவரலாமென்று சொல்லிவிட்டு, அவனைப் பார்த்ததன்மேல் அதிக துக்கத்தோடு, நீர்தாமோ என்னை விலைக்கு வாங்கவந்தவர் என, அவன் ஆமென, அரசன் நீர் யாவர் என, அவன், நான் ச்மசானுதிபதி; எங்கள் சிரேணிக்கெல்லாம் நானே தலைவன் என, அரசன் அதைக் கேட்டுத் திடுக்கிட்டு, விசுவாமித்திரரிடஞ் சென்று அவரது பாதாரவிந்தங்களில் வீழ்ந்து ஸாஷ்டாங்கமாக நமஸ்காரஞ்செய்து, ஆண்டவனே! தேவரீர் அடியேனை ஆளாக்கிக்கொண்டு கடனினின்று விடுவித்துக் கடைத்தேறப் பண்ணவேண்டுமென்று பிரார்த்திக்கிறேன்; அப்படிக்கன்றி இவ்வண்ணம்

சண்டாளனுக்கு அடிமைப்படுவதை இப்புவியில் இன்றளவும் எவரும் கண்டதுமில்லை, கேட்டதுமில்லையன்றோ என்றான். அதற்கு விசுவாமித்திரர், தவசியாகிய எனக்கு உன்னை அடிமைகொண்டென்னபயன்? நீ எனக்கு அடிமையாகவேண்டாம் போவென, அவன், ஐயனே! நீர் எப்படி ஆக்கியாபித்தாலுங் கேட்கிறேனென, சண்டகௌசிகனார், நல்லது, இந்தமட்டும் நமக்கேற்ற சமயம் வாய்த்ததேயென்று, அங்கிருந்த விசுவேதேவர்களைச் சுட்டிச் சாக்ஷிகளாவதற்காக, ஓ விசுவேதேவர்களே! அரிச்சந்திரன் சொன்னதைக் கேட்டீர்களா? இவன் நான் சொன்னபடியெல்லாம் செய்கிறானும் என்றார். அதற்கு அரிச்சந்திரன், ஆம், ஐயனே என்றான். உடனே விசுவாமித்திரர், அப்படியானால் நீ வாக்களித்தபடி இந்தச் சண்டாளனுக்கு அடிமைப்பட்டு என் தக்ஷிணைமுழுமையும் இந்த க்ஷணமே கொடுத்துவிடத்தான் வேண்டுமென, அரசன், ஓகோ நமக்கு என்னகதி வந்துவிட்டதென்று வெந்துயருற்று, ஸ்வாமி! எவ்வணம் நியமிக்கிறீரோ அவ்வண்ணமே செய்கிறேனென்று சொல்லிவிட்டு, விதியேயென்று அச் சண்டாளனிடம்போய், ஸ்வஜாதிமதத்தாரே! என்னை விலைக்கு வாங்கிக் கொள்வீராகவென, அவன், உன் சமயமென்னவென்றான். அதற்கு அரசன், அச்சண்டாளனை நோக்கி, கேளீர் ஸ்வஜாதிமதத்தாரே! பிச்சைபுக்குண்டல், கிட்டவந்துநிற்றல், வழியிற் கிடக்கும் கிழிந்த கந்தையைப் பொறுக்கி யுடுத்தல் இவற்றைத் தவிர்த்து என்னை நீர் வேறென்ன வேலை செய்யச்சொன்னாலும் செய்கிறேன் என்று சொல்ல, அவன் சரிதானென்று வெகு சந்தோஷமடைந்து பொன்னைத் தூரத்தினின்று கொடுக்க, அதை அரசன் வாங்கிக்கொண்டு மகா ஸந்தோஷத்துடன், இப்பொழுது கடனினின்று விடுபட்டுச் சாபத்திற்குத் தப்பிப் பொய்யாத வாயினனாவதற்கு இந்தச் சண்டாளனடிமையானது காரணமானதனால் இதுவே சிலாக்கியமென்று நினைத்து, கௌதூகலத்தோடு கௌசிகரிடஞ்சென்று நல்ல வார்த்தையாக, ஸ்வாமி! தக்ஷிணைப்பொன் முழுவதையும் தேவரீர் திருவுள்ளத்தின்படியே சிறிதுங் குறைவின்றிப் பெற்றுக்கொள்ளலாமென, விசுவாமித்திரர் அகந்தை அடங்கி மனஞ்சலித்து, இனிமேலும் இந்த மகானுபாவனை நிர்ப்பந்திப்பதில் சிறிதும் பயனில்லையென்று கண்டு நாணமுற்று, நான் போய்வருகிறேனென்று ஏக்கங்கொண்டு சென்றார். செல்லுங் காலை அரிச்சந்திரன் அம்மகரிஷியை ஸாஷ்டாங்கமாக நமஸ்காரஞ்செய்து, முனிவர் பெருமானே! சிறிதுகாலம் தாமதஞ்செய்துகொடுத்த குற்றத்திற்காக அடியேனை மன்னித்தருளவேண்டுமென்று பிரார்த்திக்க, அவர் நல்லது, பொறுத்தேனென்று திரும்பிப்பாராமலே சொல்லிக்கொண்டு போய் விட்டார்.

சண்டகௌசிகனார் தக்ஷிணையை வாங்கிக்கொண்டு போனபின் அரசன் தன்னைக்கொண்ட சாண்டாளனிடஞ் சென்று, ஸ்வாமி! செய்யவேண்டிய வேலையில் என்னை ஏவலாமென்றான். அவ்வாறு அரசன் மொழிந்ததைத் தருமராஜன் கேட்டு, இதுவரையில் இவ்வாறான மகாபுருஷனை நான் கண்டதுமில்லை, கேட்டதுமில்லையென்று தன்னுள்ளே ஸந்தோஷித்து, அருளுடையானே! நீ எனது மயானத்திற்குச்சென்று, அங்கே பிணத்துக்குப் போடும் கம்பளத்தை வாங்கிவைத்துக்கொண்டு, இரவும் பகலும் ஜாக்கிரதையாய் இருக்கவேண்டும்; நான் என்வீட்டுக்குப் போய்வருகிறேனென்று சொல்ல, அரிச்சந்திரன், ஸ்வாமி! சொன்னவண்ணஞ் செய்கி

றேனென்றான். சண்டாளனும் அதைக் கேட்டுக்கொண்டு தன் வீடுபோய்ச் சேர்ந்தான்.

இவ்வாறு அந்தணனுக்கு அடிமைப்பட்ட சந்திரமதியும், சண்டாளனுக்கு அடிமைப்பட்ட அரிச்சந்திரனும் அவர்களிடம் சென்று அவரவர் இட்டதொழிலை உண்மையாய்ச் செய்துகொண்டுவருகையில், ஒருநாள், அந்தணன் வீட்டிலிருந்த ரோகிதாசுவன் அவ்வுபாத்தியாயருக்குத் தர்ப்பை, சமித்து முதலிய ஓமக்கருவிகள் சேகரித்துக்கொண்டுவரும்படி மற்ற மாணக்கர்களுடன் அரணியத்திற்குச் சென்றான். அங்கு ஓர் மரத்தில் ஏறி அவன் மலர் கொய்துகொண்டிருக்கையில், அதிலிருந்த ஒரு கருநாகம் அவனைக் கடித்துவிட்டது. அவனுடன் வந்தபிள்ளைகள் அது கண்டு பயந்து அவனை வீட்டுக்கு அழைத்துக்கொண்டுபோகமாட்டாமல், அச்செய்தியைச் சந்திரமதியினிடம் போய்த் தெரிவித்தனர்.

அச்செய்திகேட்ட சந்திரமதி சோகக்கடலிலாழ்ந்து மூர்ச்சையடைந்தாளாயினும், வேறுவிதியின்மையால் தானே தேற்றிக்கொண்டு உபாத்தியாயரிடம் விடைபெற்றுத் தன் மகன் வீழ்ந்துகிடக்கும் காட்டிற்கு ஓடினாள். இவள் போவதற்குள் அவனுக்குப் பிராணன்போய்விட்டது. அது கண்டு அவள் கண்ணீர்விட்டுக் கதறியழுதவண்ணமாய் அப்பிணத்தை எடுத்துக்கொண்டு மயானத்துக்குச் சென்று அங்கோரிடத்தில் உட்காந்து குழந்தையின் தலையை மடிமேல்வைத்துக்கொண்டு அவன் முகத்தைப் பார்த்துப் பார்த்துத் துக்கம் அதிகரித்தவளாய்த் தன் கதைகளையெல்லாம் சொல்லி உரத்துப் புலம்பலானாள்.

அந்த மயானத்திலே காவல்காத்திருந்த அரிச்சந்திரன் அவ்வழுகைக் குரலைக் கேட்டு அவ்விடத்துக்குச் சென்று, அவளுடன் சிறிதுநேரம் பேச்சாடி அவள் தன் கற்புடைப் பெண்டிர் என்றும், செத்துக்கிடப்பவன் தன் அருமைப்புதல்வன் என்றும் தெரிந்து, ஆ, நமக்கு என்னவிதி நேர்ந்ததென்று மிகவும் விசனமடைந்தானாயினும், தான் அடிமைப்பட்டவனாகையால் தன் தொழிலைச் சரியாக நிறைவேற்றவேண்டுமென்று அவ்விசனத்தையடக்கிக்கொண்டு அவளை நோக்கி, பிணத்துக்குப்போடுகிற கம்பளம் கொடாமல் நீ இவ்விடம் வரக்கூடாதென்றான். அது கேட்டு அவள் நெஞ்சுருகித் தன் மகன் தரித்திருந்த ஆடையை எடுத்து அவன் கையில் கொடுத்தாள். அப்பொழுது வானத்தினின்றும் அவர்கள்மேல் பூமாரி பொழிந்தது. அது கண்டு அவர்கள் இதென்னவென்று வியந்துநிற்கையில், தானத்திலும், சீலத்திலும், தைரியத்திலும், பொறுமையிலும், ஸத்தியத்திலும் சிறந்தவனாகிய அரிச்சந்திரமகாராஜனது பெருமையே பெருமையென்று அசரீரி வாக்கு ஒன்று கேட்டது. சண்டாளவேஷம் தரித்திருந்த தருமதேவன் அத்தருணத்தில் அவ்விடம் வந்து அவர்களைத் தேற்றி, நான் உங்களுடைய ஸத்தியத்தைப் பரீக்ஷிக்கும்படி மாறுவேஷந்தரித்துவந்த தருமதேவனேயல்லாமல் வேறல்லன்; சந்திரமதியை அடிமைகொண்ட உபாத்தியாயரும் அவருடைய தருமபத்தினியும் பார்வதி பரமேசுவரர்கள். உங்களுடைய ஸத்திய விர்தத்தைக்கண்டு யாவரும் உவப்பு அடைந்தோம். விசுவாமித்திரமுனிருவம் உங்களைப் பரீக்ஷித்து உங்கள் பெருமையை இப்புவியில் நிலைநிறுத்துமாறு உங்கள் இராஜ்யத்தைத் தானம்வாங்கினவரேயன்றி வேறல்லர். ஆதலால் நீங்கள் இனி உங்கள் ராஜ்யத்திற்குச் சென்று சுகமாயிருக்கலாம் என்று சொல்லி, ரோகிதாசுவனையும் பிழைப்பூட்டிப்

முடிப்பதில் திறம்பா மனவுறுதியே உண்மையான பெருந்தகைமை அனைத்திற்கும் அஸ்திவாரமாகின்றது. அலுப்பான பாடுபறப்பையும், மனதிற்கு இதமல்லாத அல்லல் அலைச்சலையும் வினாவாய் ஊடறுத்துச் செல்லும்படி மனவலிமை என்பது எவனையும் வல்லவனாக்கி, எந்தெந்தத் தொழிலிலும் முந்தச் செலுத்தி உயர்பதம் அடைவிக்கும். விவேகத்திலும் மனவலி அதிகம் சாதிக்கும். விவேகிக்கு உண்டாகும் கஷ்டநஷ்டங்களிற் பாதியும் மனவலியுடையானுக்கு உண்டாவதில்லை. செய்யும் கருமம் எதையும் சிதறாது சித்திக்கும்படிச்செய்வது அத்தனையும் மனமேதவிரச் சிறந்த விவேகமல்ல; அருந்தொழில்களை முடிக்கத்தக்கது பராக்கிரமம் மாத்திரமல்ல, ஊக்கத்துடன் தொடுபிடியாய் உழைக்கத் தக்க மனமுமேயாம். ஆகவே, எவனெவனுடைய பெருந்தகைமைக்கும் மனவலிமையே முக்கியமான பலம் எனச் சொல்லலாம். பின்னும் ஆய்ந்துபார்க்குமளவில் மனவலியாவது மனிதனே என்னவேண்டும். அது அவன் செய்யும் செயல் அனைத்திற்கும் உற்சாகமும், யத்தனிக்கும் யத்தனம் அனைத்திற்கும் ஜீவனும் கொடுக்கும். ஒரு பொருளினிடத்தில் உண்மையாக விருப்பமுண்டாவது மனவலிமையாலேதான். "மனவலியற்றவன் எதற்குமுதவான்" என்பது ஒரு பெரியோர் சொன்ன பழமொழி. மனவலியுடைமைக்குச் சமானமாகிய பெரும்பேறு வேறில்லை. மனவலியுடையோன் செய்யும் முயற்சி சிறிதும் வாய்க்காமல்போயினும், தன்னால் ஆமளவிற்கு நெஞ்சறிய முயன்றதை நினைத்து அவன்மனம் ஆறும். தாழ்ந்த ஸ்திதியில் இருக்கும் ஒருவன் பொறுமையைப் படைக்கலமாய்க் கொண்டு துன்பத்துடன் பொருது, மனநிறையைப்பற்றி எக்களித்து, உதிரம் பெருகிக் கால் இரண்டும் துவள, மனோதீரத்தை இரு பாதமாய்க் கொண்டு நடப்பதைக் காண்பதினும் கண்ணுக்குச் சிறந்து மனதை மகிழ்விக்கும் காட்சி மற்றொன்றும் இல்லை.

இளைஞர் விரும்புவதை விரும்பியபடித்தடையறச் செய்யாது விடுவார்களானால், அவ்வெறு விருப்பம் அவர்கள் மனதிற்கு ஒரு வகைச் சோர்வு உண்டாக்கும். அனேகர் செய்யும் வண்ணம் தளபதி வருமளவும் வீணே காத்திருப்பது உதவாது; அதன் இடையில், உவெலிங்தன் செய்ததுபோலச் சிறிதும் விட்டுவிடாமல் சண்டை செய்துகொண்டுவரவேண்டும். நினைத்த நற்கருமத்தை நின்றநிலையிற் பிரியாமல் உற்சாகத்துடன் செய்துமுடிக்கவேண்டும். உலகத்தில் அனேகந் துறைகளில் படும் பாடுபறப்பையும் தேகசிரமத்தையும் நமது நன்மைக்கு உதவும் உத்தமமான பயிற்சியென்று உல்லாசமாய் உத்தரிக்கவேண்டும். "இம்மையில் மனமும் மெய்யும் வருந்தி உழைக்கும் உழைப்பாலன்றி மற்றப்படிப் பயன் பெறுவது ஒருபோதும் இல்லை. விட்டுவிடாமல் மேலுமேலும் வருந்தி முயல்வதுதான் இவ்வுலக வாழ்வு. இவ்விஷயத்தில் என் கருமம் கை

கூடிவந்தது, ஆனால் என் தைரியம் ஒன்றுக்கும் அசையவில்லை என்று முறைமையான அபிமானத்துடன் சொல்லத் துணிகிறேன். யுத்தி அனுபவங்களைச் சார்ந்து சொல்லின், உர நெஞ்சும் உன்னத அபிப்பிராயமுமுள்ளவன் நினைத்த காரியம் எதையும் முடிப்பான்" என ஒருவர் மொழிந்திருக்கிறார்.

அற்ப புத்தியுள்ளவர்களும் ஒரு காரியத்தைச் செய்யும்பொழுது வேறு நினைவின்றி அதிலே மனம் அழுந்தப் பிரவர்த்தித்து இளைப்புறாது செய்துவருவார்களானால், எத்தனை எத்தனையோ காரியங்களைச் சாதிக்கமாட்டுவார்கள். "வல்லவனுக்குப் புல்லுமாயுதம்" என்றபடி மனவலிமையொன்றிருக்குமாயின், மிகவும் சாதாரணமான கருவிகளைக்கொண்டும் எந்தக் கருமமும் எளிதில் சாதிக்கலாகுமென்பது ஒரு பெரியவருடைய கோட்பாடு. "உன் கைக்குக் கிட்டுவது எதுவாயினும் அதை உன் முழுபலத்தோடும் செய்" என்கிற கற்பனைக்கு அவர் கோட்பாடு திர்ஷ்டாந்தம் ஆயிற்று. எந்தக் காரியத்தையும் செய்யும்பொழுது வேறு நினைவின்றி அவ்வொன்றிலேயே சிந்தைகுவிந்து செய்ததனால் தாம் செய்த கருமம் அனைத்தும் வாய்த்தனவென்று அவர் மொழிந்தார்.

செய்யத்தக்க அருந்தொழில் எதையும் தீரத்தோடு உழைக்காவிடின் செய்து முடிக்கக் கூடாது. மனிதருக்கு உயர்வு உண்டாவது முக்கியமாய் மனப்போராட்டத்தால். செய்யும் தொழிலில் இடையூறு உண்டாகும்பொழுது மனதிற்கும் அதற்கும் சண்டை நடக்கின்றது. அம்மனப்போராட்டமே உற்சாகம் எனப்படும். அசாத்தியமெனத் தோன்றும் காரியங்கள் உற்சாகத்தால் பெரும்பாலும் சாதிக்கப்படுவதைக் காணும்பொழுது ஆனந்தம் உண்டாகின்றது. மின்னல் மழைக்கு முற்குறி ஆவதுபோல, பெரும்பாலும் நமது விருப்பம் நாம் சாதிக்கக்கூடிய காரியங்களுக்கு முற்குறியாம். பயங்காளிகளுக்கும் இருமனமுடையவர்களுக்கும் எந்தக் காரியமும் அசாத்தியமாகத் தோன்றுவதனால் அவர்களால் சாதிக்கக்கூடாதே போகின்றது.

இவ்விந்துதேசமானது சென்ற நூற்றாண்டில் பிரித்தானியருடைய மனவலி விளங்கிய பெருஞ்சமர்க்களமாயிருந்தது. க்ளைவ் என்பவருடைய காலமுதல் ஹவிலாக்; க்லேட் என்பவர்கள் காலம் அறுதியாக, இந்திய சட்டநிரூபணஸபையிலும் சண்டைமுயற்சியிலும் குறிக்கொள்ளத் தக்கவர்களாயிருந்தவர்கள் உவெல்ஸ்லி, மெற்காப், ஔத்ராம், எட்வார்ஸ், லாரென்ஸ் முதலிய பிரபலர் வெகு வெகு பெயர்.

உவாரேன் ஹேஸ்திங்ஸ்

என்பவர் அவர்களுள் ஒருவர். அவர் எதற்கும் இளைக்காத முயற்சியும் மனோதீரமுமுள்ளவர்; அவர் நெடுங்காலமாய்ப் பிரசித்தமான குடும்பத்திற்பிறந்தவர். அக்குடும்பத்தார் ஒரு விவகாரத்தில் இடர்

நேரிட்டதனால் தரித்திரர் ஆனார்கள். பலநூறு வருஷகாலம் அவர்கள் ஸ்வாதீனத்தில் இருந்த டேயில்ஸ்போர்ட்டில் உள்ள குடும்பசொத்தாகியபூஸ்திதி பின்னாளில் அவர்கள் கைகடந்து போய்விட்டது; ஆனால், டேயில்ஸ்போர்ட் ஹேஸ்திங்ஸ் எனக் கடைசியில் பட்டப் பெயர் வழங்கிய பிரபு அங்குள்ள கோவிற்பற்றைத் தமது கனிஷ்ட புத்திரனுக்குக் கொடுத்தார். அப்பால் வெகுவருஷஞ் சென்று அவர் பெயரன் உவாரென் ஹேஸ்திங்ஸ் பிறந்தார். அந்த உவாரென் ஹேஸ்திங்ஸ் இளமையில் கிராமபாடசாலையில் பயிர்க்குடிகளின் பிள்ளைகளுடன் தாரதம்மியமின்றிக் கலந்து கல்வி கற்றார். தம் முன்னோர் சொத்தாயிருந்த நிலத்தில் விளையாடினார். ராஜபக்தியுள்ள தைரிய புருஷராகிய டேயில்ஸ்போர்ட் ஹேஸ்திங்ஸ் பிரபுவின் பெருந்தகைமையைப்பற்றிய நினைவு அவ்விளைஞர் உள்ளத்தில் எப்பொழுதும் குடிகொண்டிருந்தது. அவரது இளமனதில் பெருமைபெறவேண்டுமென்னும் அபேக்ஷை உண்டாகியது. அவர் வேனிற்காலத்தில் ஒரு நாள் அந்தப்பாளையப்பட்டில் செல்லும் ஆற்றங்கரையிலே படுத்திருக்கையில், தம் குடும்ப சொத்தாகிய அந்தப் பூஸ்திதியை மீளவும் ஸ்வாதீனமாக்கிக்கொள்வேன் என்று தம்மனதில் சங்கற்பித்தாராம். அப்பொழுது அவருக்கு வயது அதிகமல்ல, ஏழே ஏழுதான். அந்தச் சிறுபருவத்திலே அவர் நினைவில் உதித்த அந்தச் சங்கற்பமானது விபரீதமாகத் தோன்றிய ஒரு சொப்பனமென்றே நினைக்கும்படியிருந்தது. ஆயினும், அவர் இறக்குமுன் நினைத்தபடி சாதித்தார். கனாக் கண்டதுபோல் மனதில் எழுந்த எண்ணம் அவர் பிராணனை ஒட்டி வேர் ஓடிய பேராசை ஆயிற்று. அவர் இளமைப்பருவம் தொடங்கி ஆடவராகிறவரையில் அந்தத் தீர்மானத்துக்கு ஏற்றபடி எதற்கும் இளைக்காத மனோபலத்துடன் பதைப்பற்று அடங்கியிருந்து இடையறாது சாதித்துக்கொண்டுவந்தார். எதற்குமடங்காத மனோபலம் அவருக்குஉள்ள குணங்களில் மிகவும் கவனிக்கத்தக்க சிறந்த குணமாகியது. அந்தத் தாய்தந்தையர் இல்லாத அநாதச் சிறுவர் அவர் காலத்திலிருந்த விசேஷ வல்லவர்களில் ஒருவரானார்; கைகடந்துபோன தம்முன்னோர் சொத்து எல்லாவற்றையும் திருப்பிக்கொண்டார்; பழைய பூஸ்திதியைக் கிரயத்திற்கு வாங்கித் தம் குலத்தை விளக்கிய மாளிகையை அழித்து நூதனமாகக் கட்டுவித்தார். "இவ்விந்துதேசத்தில் கவர்னர் ஜனரலாகவந்து வாசஞ்செய்து ஐந்துகோடிப் பிரஜைகளை ஆண்டுவரும்பொழுது, நடந்த சண்டைகளைப்பற்றியும், அரசிறை வரவு செலவுக் கணக்கைப்பற்றியும், சட்டநிரூபணத்தைப்பற்றியும், அவர் உள்ளத்தில் குடிகொண்ட விசாரம் மிகுதி. இத்தனை விசாரம் மேலிட்டிருந்தும், அவர் ஆசைக்கோ முன் உள்ளபடி டேயில்ஸ்போர்டே பின்னும் இலக்காயிருந்தது. நாட்பட உத்தியோகபாரம் தாங்கிய காலமெல்லாம் அவருக்கு நன்மையும் தீமையும், புகழும் இகழும்

விபரீதமாய் உண்டாயின. அந்தக் காலம் முடிந்தபின் அவர் விசார மற்று ஒதுங்கியிருந்து இறக்கும்படி போனது டேயில்ஸ்போர்டுக்கே" என மெக்காலெ சொல்லுகிறார்.

ஸர் சார்ல்ஸ் நேப்பியர்

இந்தியாவில் மிகுந்த தீரமும் மனோநிர்ணயமுமுள்ளவரான மற்றொரு வீரராம். அவர் ஒருமுறை சேனாதிபதியாய்ப்போயிருக்கும் பொழுது, தம்மை நான்கு திக்கிலும் சுற்றிக்கொண்ட சங்கடங்களைச் சுட்டி "தரையில் எனது அடி பின்னும் அதிகம் இறங்க ஊன்றிநிற்கும்படி அவை செய்கின்றன" என மொழிந்தார். அவர்செய்த மீனியுத்தம் சரித்திரத்தில் குறித்திருக்கும் மிகவும் அதிசயமான பராக்கிரமச்செயல்களில் ஒன்று. அவர் சண்டைக்குக் கொண்டுபோன சேனாவீரர் 2,000 பெயர்; அவர்களில் ஐரோப்பியர் 400 பெயர். அவரோடு பல படைக்கலமும் அணிந்து எதிர்த்த வீரர் 35,000 பெலூச்சியர். இதைக் கேட்பவர்கள், இப்படி துணிந்து நிர்ப்பயமாய்ச் சண்டைசெய்யப் போவாரும் உண்டோ என நினைத்துப் பிரமையடைவார்கள். ஆனால், அந்தத் தளபதிக்குத் தமது திறமும் தமது சைனியத்தின் திறமும் நன்றாய்த் தெரிந்ததனால் அவர் ஒன்றுக்கும் அஞ்சவில்லை. பெலூச்சிப் பட்டாளத்தின் நடுஅணிவீரர்கள் ஓர் உயர்ந்த மேட்டில் நின்றார்கள். அம்மேடு அவர்களுக்கு எதிர்முகமாயுள்ள கொத்தளம்போல் இருந்தது. மூன்று மணிநேரம் யுத்தம் சண்டப்பிரசண்டமாய் நடந்து வெகு பெயர் மடிந்தனர். அவருடைய சிறிய தளத்தில் ஒவ்வொரு சேவகனும், தளபதி வீராவேசம் புகட்ட, அந்தச் சமயத்திற்குப் பெயர்பெற்ற ரணசூரன் ஆனான். பெலூச்சியர் ஒன்றுக்கு இருபது பெயர் விகிதம் தொகை பெருகியிருந்தும், நிலைகுலைத்துத் துரத்திவிடப்பட்டார்கள்; ஆனால், பகைவர்க்குப் புறங்காட்டாமல் முகம் பார்த்தபடி பின்னடைந்தார்கள். இவ்வகைத் தீரமும், பிடித்தபிடியை நெகிழவிடாத உறுதியும், விடாமுயற்சியுமே சுத்தவீரர் செய்யும் சண்டைகளிலும் மற்ற எவ்வகைச் சண்டைகளிலும் வெல்வனவாம். பந்தயச்சாலையில் ஒரு கழுத்திடை முந்தும் குதிரையே பந்தயம் கெலித்துத் தன் பிறப்பு ரோஷத்தைக் காட்டுவது; ஒரு மூச்சுப் பின்னும் அதிகம் முந்திச் செல்லும் ராணுவசேவகருக்கே ஜயம்; பின்னும் ஐந்து நிமிஷம் கொண்டது கைவிடாத மனவுறுதியோடு கூடிய தீரமே சண்டையில் வெற்றி உண்டாக்குவது. உன் பலம் எதிரி பலத்திற் குறைந்திருந்தாலும் நீ உன் பலமுழுதும் கூட்டி அதிக நேரம் செலுத்துவாயானால், எதிரிக்கு இணையாகி அப்புறம் அவனிலும் பலசாலிஆவாய். யுத்தவீரனாகிய வாலிபன் ஒருவன் தன் கத்தி நீளம்போதாதென்று பிதாவினிடம் முறையிட, பிதா "பின்னும் ஒரு

அடி எட்டிவை" என மொழிந்த மறுமொழி ஒவ்வொரு லௌகிக வியாபாரத்திற்கும் ஏற்கும்.

நேப்பியர் தமக்குள்ள வீரத்தைத் தமது தளத்திற்கும் தகும் வகை தெரிந்து புகட்டினர். பட்டாளத்தில் உள்ள ஒரு சாமானிய சேவகன்போலவே அவர் பாடுபட்டு உழைத்தார். தளபதி உத்தியோகஞ்செய்வதிலுள்ள நுட்பமாவது, தளம் செய்யும் வேலையில் தளபதிதாமும் ஒரு பங்கு செய்வதே. தளம் செலுத்திப்போகும் அதிகாரியின் மனமுழுதும் வேலையில் புகுந்திருந்தாலன்றி அவன் காரியம் சாயாது. தொல்லை ஏற ஏற உழைப்பும் ஏறவேண்டும்; ஆபத்து முதிர முதிர, அது அறத் தொலையுந்தனையும் தைரியம் அதிகரிக்கவேண்டும். கச்சி மலைநாட்டுச் சண்டைக்கு அவர் படையெடுத்துப் போனபொழுது, அவருடன் கூடச் சென்ற வாலிபராகிய உத்தியோகஸ்தர் ஒருவர் ஒரு சமயத்தில் அவனைச் சுட்டி "அந்த விருத்தர் இடைவிடாமல் குதிரை ஏறி அலுவலின் பெயரில் திரிவதைக் கண்டிருந்தும், இளம்பருவமும் தேகபலமுமுள்ள நான் செயலற்றுச் சோம்பியிருப்பது எப்படி? அவர்மாத்திரம் வாய்திறந்து ஒரு வார்த்தை சொல்வாரானல், குண்டு மருந்து கெட்டித்திருக்கும் பீரங்கிவாய்க்குள்ளும் அச்சமற்று நுழைவேன்" எனக் கூறினர். இவ்வாறு அவ்வுத்தியோகஸ்தர் சொல்லியதைக் கேட்ட எவரோ நேப்பியருக்குச் சொல்ல, அவர் இது தாம் பட்டபாட்டுக்குப் பெரும் பயனென்று மொழிந்தார். இவ்விந்தியாவில் செப்பிடுவித்தைக்காரன் ஒருவனுக்கும் அவருக்கும் நடந்த சம்பாஷணையைக்குறித்துச் சொல்லியிருக்கின்ற ஒரு கதையால், பிறப்பிலேயே அவருக்கு அமைந்த மனோதீரமும், எவரும் வியக்கத்தக்க நிஷ்கபடமும், நேர்மையான ஒழுக்கமும் ஐயமற வெளிப்படுகின்றன.

இத்தேசத்தில் நடந்த பருங்கலகம்.

அங்கிலோ இந்திய அரசாட்சி சரித்திரத்தில் குறித்திருக்கும் பற்பல சங்கதிகளினும் பின்னிட்டு இத்தேசத்தில் நடந்த பயங்கரமான கலகமே, அங்கிலேயருக்கு உரிய உறுதியான மனவலியையும், தங்கள் ஆண்மை சமயத்திற்கு உதவும் எனும் தேற்றத்தையும் மயக்கமின்றி யாவருக்கும் தோன்ற வெளிப்படுத்தியது. அங்கிலேய அதிகாரிகள் பெரும்பாலும் மதிமயங்கிப் பாரமான பிரமாதங்களில் இறங்கினலும் இறங்குவார்கள்; அங்கிலேய பிரஜைகளோ அவ்வாறன்றி அந்தப் பிரமாதங்களினின்று நினைத்தற்கு அரிய வீரத்தோடு விலகுவதற்குவேண்டிய உபாயம் சூழ்வார்கள். 1857-ம் வருஷம் மேமீ இவ்விந்தியாவில் பெரும் கலகம் இடிமுழக்கம்போல் உண்டானபொழுது இங்கிருந்த பிரித்தானிய ராணுவசேவகர் தொகை மிகவும் குறைந்துபோயிருந்தது; அவர்கள் தேசத்தில் எங்கும் சித

றுண்டிருந்தார்கள். அனேகர் வெகு தூரத்தில் உள்ள ராணுவ ஸ்தானங்களில் இருந்தனர். வங்காளப் பட்டாளத்தார், ஒருவர் பின் ஒருவராகத் தங்கள் அதிகாரிகள் சொல்லை மீறி, கட்டுக்கு அடங்காமல் வெளிவந்து டில்லிக்கு வெகு விரைவாய்ப் போனார்கள். ஒன்றன்பின் ஒன்றாகப் பல மாகாணங்கள் கலகத்திலும் அதிக்கிரமத்திலும் மூழ்கலாயின. ஆபத்திற்கு உதவிபுரியவேண்டும் எனும் ஒலம் கிழக்கு மேற்கு எங்குமிருந்து எழுந்தது. எங்கெங்கும் அங்கிலேயரைக் கலகக்காரர் தப்பவிடாமல் வழி மறித்துத் தடுத்துச் சூழ்ந்து கொண்டார்கள். அவர்கள் எதிரிகளோடு எதிர்க்க வசமற்றிருந்தார்களெனவும், அவர்கள் முற்றும் அபஜயப்பட்டு இந்தியாவில் பிரித்தானியதுரைத்தனம் அடியோடே நசிப்பது திண்ணமெனவும் தோன்றியது.

கலகத்தின் முடிவு இத்தன்மையதென்று தெரியாதிருக்கையில், சுதேச மன்னரில் ஒருவராகிய ஹொல்கார் தமது சோதிடசாஸ்திரியைக் குறிகேட்டார். அந்த சாஸ்திரி "ஐரோப்பியருள் ஒருவன்தவிர மற்றெல்லோருமே சங்கரிக்கப்பட்டாலும், அவ்வொருவன் இங்கிருந்து சண்டைசெய்து மீளவும் தேசத்தைக் கட்டிக்கொள்வான்" எனக் குறிசொன்னார். பெருங்கலகமாகிய காடாந்தகாரம் எங்கும் மூடிய சமயத்திலும், லக்ஷ்மணபுரி முதலிய நாடு நகரங்களில் சில பிரித்தானிய ரணவீரரையும் ஸிவில் உத்தியோகஸ்தரையும் ஸ்திரீகளையும் திரள் திரளான படைவீரர் ஆயுதபாணிகளாக அடர்ந்து சூழ்ந்தது கண்ட இடத்தும், அவர்கள் இனித் தமக்குத் தப்பிப்பிழைக்க வகையில்லையென்று ஒரு வார்த்தை சொல்லவுமில்லை, மாற்றானுக்கு அடங்கி வசப்பட நினைக்கவுமில்லை. நாலு நாள் பத்து நாள் அல்ல; நாலைந்து மாதகாலம், தங்கள் தேசத்தாருக்குச் செய்தி எழுதி அறியும்வழி அடைபட்டிருந்தும், இந்தியாராச்சியம் தங்கள் வசத்தினின்று விலகியதோ இன்னும் தங்கள் வசம் இருக்கின்றதோ என்ற உறுதி அறியாதிருந்தும், தங்கள் தேசத்தார் மிகவும் தைரியசாலிகள், தங்களை ஒருபோதும் உபேக்ஷை செய்யார்கள் என்னும் நம்பிக்கையைமாத்திரம் கைவிடவில்லை. அங்கிலேயர் சிலர் பெயரப் பிரிய வழியின்றி இந்தியாவில் அடைபட்டிருக்கிறார்களென்ற செய்திகேட்டுச் சீமையில் உள்ளவர்கள் சிந்தனையற்றுத் தங்களை மாய்ந்துபோகவிடார்களென்று அவர்கள் மனதிற்கு நன்றாய்த் தெரிந்தது. இடர் ஒழிந்து இறுதியில் ஜயம் உண்டாகுமென்று எண்ணியதொழிய, இந்தக் கலகம் தமக்கு விபரீதமாய் முடியுமென்று அவர்கள் சொப்பனத்திலும் எண்ணவில்லை; தமக்கு நேர்ந்த பிரதிகூலம் முற்ற முடியப் பிரதிகூலமாகவே இருக்குமானால், அவரவர் நின்ற நிலையில் விழுந்து செய்கருமம் முடிக்கும் தொழிலில் மாய்வது திண்ணமென்று அவர்கள் மனதில் உறுதி பிறந்திருந்தது. ஹவிலாக், இங்லிஸ்,

நீல், ஊத்ராம் என்பவர்களுடைய பெயரை இதை வாசிப்பவர்களுக்கு ஞாபகப்படுத்தவேண்டுமோ? அவர்கள் சுத்த வீரரென்று உடம்பெடுத்த மகா புருஷர்; "மனுஷியசாதியிற் பிறந்தவர் அனைவர்க்குமே அவர்களால் கௌரவம் உண்டாயிற்று" என ஒருவர் அவர்களைச் சுட்டிமொழிந்தார். ஆனாலும் அந்தப் பயங்கரமான போர் தொடங்கி முடிகிறவரையில் ஸ்திரீகள், ஸிவில் உத்தியோகஸ்தர், தளபதிமுதல் சாமானிய சேவகன் வரையிலுள்ள யுத்த வீரர்ஆகிய எத்திறத்தோரும் பெருந்தகையுள்ளோர் எனும்படி சாதித்தார்கள். அந்த ஆடவர் ஆய்ந்து பொறுக்கியெடுத்த ஆணித்தரமானவர்களல்ல; சீமையில் நாள்தோறும் வீதிகளிலும், தொழிற்சாலைகளிலும், கழனியிலும், சத்திரமுதலிய கும்புகூடும் இடங்களிலும் காணும் சாமானிய வகுப்பினின்று வந்தவர்களேயாம். ஆயினும் திடீரென்று அபாயம் வந்தபொழுது, அவர்கள் அத்தனை பெயரிடத்திலும் சமயத்திற்கு ஏற்ற சாமர்த்தியமும் மனவலிமையும் விளங்கின. அத்தனை பேரும் அத்தனை வீரர் ஆனார்கள்.

ஸர் ஜான் லாரேன்ஸ்

என்பவருடைய சாமர்த்தியமே டில்லியைக் கைவசப்படுத்தியது, இந்தியாவைக் கலகத்தீக்கு இரையாகாமல் தப்புவித்தது. வடமேற்கு மாகாணத்தில் லாரென்ஸ் என்றபெயரைக் கேட்கையிலேயே மிகுந்த பராக்கிரமமுள்ளவரென்ற தோற்றம் உண்டாகும்படியிருந்தது. செய்கடன்-ஊக்கம்-தன்முயற்சி இவைகளைக்குறித்து அவருக்குள்ள மதிப்பு மிகவும் உயர்தரமாயிருந்தது. அவர் அதிகாரத்துக்குட்பட்ட ஒவ்வொரு சேவகனும் அவர் மனதின் இயற்கையைக் கண்டு தானும் அவ்வியற்கை பூண்டு நடந்தான். அவர் ஒருவர் குணம் குறிகளே ஒரு பட்டாளத்திற்குச் சரியென்று சொல்லியிருக்கிறது. அவர் சகோதரர் ஸர்ஹென்ரி லாரென்ஸைப்பற்றியும் இதே பிரகாரம் சொல்லலாம். டில்லியைக் கைவசப்படுத்துவதற்கு மிகுந்தமுயற்சிசெய்த பாஞ்சாலதேசத்து ராணுவத்தைச் சேர்த்து உருவாக்கினவர் அவர்தாம். அவ்விரண்டு சகோதரரும் தம்மைச் சூழ்ந்தவர்கள் மனதில் குன்றாத அன்பும் தீரமும் புகட்டினார். சுத்த வீரருக்கு இன்றியமையாத லக்ஷணங்களில் ஒன்று உள்ளக் கசிவு; இந்த லக்ஷணம் அவர்கள் இருவருக்கும் உண்டு. இருவரும் ஜனசமூகமத்தியில் வாசமாயிருந்து, தம்மைப் பார்த்து எல்லாரும் நல்வழியில் தவறாது நடக்கும்படி செய்தார்கள். "அவர்கள் தங்கள் அரிய குணாதிசயங்களை வாலிபர் மனதில் சித்திரித்துவைக்க, அந்தப் படத்தையே மாதிரியாக வைத்துப்பார்த்து, அவ்வாலிபர் தாம் அங்கங்கே போய்க் கைக்கொண்ட அரசாட்சித்துறைகளை நிர்வகித்தார்கள். இது எல்லாவற்றுக்கும் மேலானது." எனக் கர்னல் எட்வார்ட்ஸ் சொல்லுகிறார். ஸர் ஜான் லாரென்ஸின்

பக்கத்தில் இருந்த மன்கமரி, நிக்கல்ஸன், காற்றன், எட்வார்ட்ஸ் என்பவர்களும் அவனைப்போலவே காலவரம்பு தவருதவர்கள், மனவுறுதியும்பெருமனதும் உள்ளவர்கள். ஜான் நிக்கல்ஸன் மிகுந்த நாகரிகமும் ஆண்மையும் உதாரமனமுமுள்ளவர். அவர் செய்த எவ்வகைத் தொழிலேயும் முழுவலியுடன் நெஞ்சாரச் செய்ததனுல் அத்தொழில் அனேத்திலும் பெருமைபெற்றவராஞர். பக்கிரிகள் ஒரு பக்ஷத்தார் அம்மகானேக்குறித்து உண்டான அதிசயாவேசத்தின் வசப்பட்டு அந்த நிக்கல்ஸனே ஆராதிக்கவும் தலேப்பட்டார்கள். அது கண்டு அம்மதிகேட்டிற்காக அவர்களிற் சிலரை அவர் தண்டிப்பித்தார். தண்டிப்பித்தும், அவர்கள் விட்டுவிடாமல் அவருக்கு அர்ச்சனே செய்துகொண்டேவந்தார்கள். அவர் மனவலி குன்ருமல் கைக்கொண்ட கருமத்திற் கண்ணுயிருந்ததற்கு, 55-வது பட்டாளத்தில் கலகஞ்செய்த சிப்பாய்களே அவர் ஏறின குதிரையை விட்டு இறங்காமல் அடுத்து, இருபது மணிநேரம் எழுபது மைலுக்கு அதிக தூரம் தொடர்ந்து போனதையே திர்ஷ்டாந்தமாய் எடுத்துக்காட்டலாம். பகைவர் டில்லியில் கொடி ஏற்றியபொழுது, லாரென்ஸூம், மன்கமரியும் பாஞ்சாலதேசத்துப் பிரஜைகள் தமக்குத் துணேநிற்பது நிசமென மனம் தேறி, அவர்கள் தம்மை வியந்து உறுதியாக நம்பும்படிசெய்து, தங்கள் மாகாணத்தைச் சிறிதும் கலகமின்றிக் காக்கும்படி தம்மால் ஆமளவிற்கு வருந்தி முயன்ருர்கள். அன்றியும் கைக்கு எட்டிய ஐரோப்பியர் ஸீக்கியர் ஆகிய ராணுவவீரர் அனேவரையும் அந்நகரத்திற் சண்டைக்குத் துரிதமாய் அனுப்பினுர்கள். ஸர் ஜான் சேனுதிபதிக்குக் கடிதம் போக்கி, "டில்லிக்கோட்டையை வளேந்து கலகவகுப்பாரைத் தப்பவிடாது நெருக்கிக்கொண்டு நிற்கவேண்டும்" எனத் திட்டஞ்செய்தார். அப்பொழுது நிக்கல்ஸனுக்கு வசப்பட்ட தளம் நில்லாமல் எட்டி அடிவைத்து நெருக்கி நடந்துபோனது. பிற்பாடு நிக்கல்ஸனே அடக்கஞ்செய்த இடத்தில் நெஞ்சுகலங்கிப் புலம்பின ஸீக்கிய ரணவீரன் ஒருவன் "இவர் ஏறிய படைக்குதிரை தரை அதிர மிதிக்கும் சத்தம் வெகு மைல்தூரம் கேட்குமே" என மொழிந்தான்.

டில்லி முற்றுகையும் சண்டையும்

அந்தக் கொடிய கலகத்தில் நடந்த பற்பல காரியங்களில் மிகவும் பிரபலமானவைகள். ஆனுலும் லக்ஷ்மணபுரி முற்றுகையில் 32-வது பிரித்தானிய பட்டாளத்தார், சுத்த வீரராகிய இங்கிலிஷ் தளபதியோடு, யுத்த சன்னத்தரான பகைவர் இரண்டு லக்ஷம் பெயரையும் அச்சமற்று ஆறு மாதகாலம் எதிர்த்துநின்ற அதிசயமே பின்னும் ஒரு பங்கு அதிகமாய்க் கொண்டாடப்படும் போலும். டில்லியிலும் பிரித்தானிய ராணுவவீரர், காண்பவர்களுக்கு முற்றுகைசெய்வார்போலத் தோன்றியும், வாஸ்தவமாய்ப்

அவனுக்கு இந்த வூரில் என்னவேலே; நீ ஏன் அவனுடன்கூடத் தந்தனப்பாட்டுப் பாடிக்கொண்டு திரிகிருய்; அவனுடன் சேர்ந்தால் நீயும் கெட்டுப்போவாய்; உனக்கு க்ஷேமப்படவேண்டுமென்றிருந் தால் இனி அவனுடன் சேராதே என்ருன். அதுகேட்டு நாங்கள் ஸங்கீதத்தின் ரஸமறியாத இப்படிப்பட்டவர்களுடைய போதனை யே ஸரஸ்வதியின் பிராணனுக்கு ஒப்பான ஸங்கீதவித்தை நாளுக்கு நாள் நம்முடைய நாட்டில் குறைவுபட்டுவருவதற்கு ஒருவாறு காரணமெனத் தெரிந்துகொண்டோம்.

ஸங்கீதம் தெரியாதவனும், ஸங்கீதத்தைக் கேட்டு ஆநந்திக்காத வனும், ராஜத்துரோகம் செய்தவனுக்குச் சமானமெனவும், கொடிய னெனவும், குச்சிதனெனவும், நம்பத்தக்கினவனல்லனெனவும் ஒரு கவிசொல்லுகிருர். மேலும் ஆதிகாலந்தொட்டு நமது தேசத்தில் மிகு தியாக வழங்கிவந்த ஸங்கீதசாஸ்திரத்தை அலக்ஷியம்செய்வது நம க்கு அவமானமல்லவா? ஆதலின், நேசர்களே! நீங்கள் அனைவ ரும் ஸங்கீதத்தின் ரஸமறியாத பேதைகளுடைய போதனையைக் கேளாமல் ஸங்கீதவித்தையில் நன்ருய்ப் பயின்று, நம்மைப் படைத் துப் பாதுகாக்கின்ற பரமபுருஷனை இன்னிசையால் பாடிப் புகழ்ந்து பேராநந்தமடையக்கடவீர்கள். ஸாதாரணமாய்ப் பத்தியங்களைச் சொல்லித் தோத்திரஞ்செய்வதினும், நல்லிசைபாடிப் போற்றுவ தினுல் கடவுளுக்கும் கருணை மிகுவதென்ருல், கானரஸத்தின் பெரு மையை நாம் என்னென்று சொல்லலாம்! ஆயின், மற்றவைகளைப் போலவே இந்த ஸங்கீதவித்தையும் நல்வழியிலன்றித் தீயவழியில் உபயோகிக்கப்படுமாயின், தானும் தீயதாகித் தன்னைக் கற்றவனை யும் தீமையில் புகுத்திவிடுமென்பதை நீங்கள் என்றும் மறவாதிருக்க வேண்டும்.

சிறுவர்க்கானகதை.

மூன்று சகோதரர்கள்.

பாக்தாது என்னும் பட்டணத்தில் அபெந்தாலியென்று ஒரு வர்த்தகனிருந்தான். அவன் யதோசிதமான கௌரவத்துடன் காலங் கழிப்பவனேயன்றி மிகுந்த தனிகனன்று. அவ்வர்த்தக னுக்கு மூன்றுபிள்ளைகள். அவர்களுள் பெரியபிள்ளைகள் இருவரும் வடிவத்தில்மட்டும் கம்பீரமாய்க் காணப்பட்டார்களேயன்றிப் புத்தி யில் மிகவும் மந்தர்களாயிருந்தனர். சிறுவனுன மூன்ருவதுமகனே வடிவத்தில் மிகவும் சிறியன்; ஆயினும் புத்தியில் மிகவும் சிறந் தவனுகி அந்தந்த ஸமயத்திற்கேற்றபடி நடக்கத்தக்க யுக்தி புத்தி ஸாமர்த்தியங்கள் உள்ளவனுயிருந்தான்.

அப்படியிருக்கையில் அபெந்தாலி தன் பிள்ளைகள் நிற்கும் நிலைமையைநோக்கி, இவர்கள் உள்ளநாளளவும் சுகமாய் வாழ்வதற்குப் போதுமானபொருள் என்னிடத்தில் இல்லை; நானோ கிழவனாய்விட்டேன்; என் பிராணனிருக்கும்போதே இவர்களுக்கு வேண்டியபாடுபெட்டு ஏதாவதொரு தொழிலில் பிரவேசிக்கும்படி செய்யாவிட்டால் இவர்கள் கெட்டுப்போவார்கள்; இதற்கென்னசெய்வது என்று ஆலோசித்து, ஒருநாள் அவன் தன் பிள்ளைகள் மூவரையும் தன்னிடம் அழைப்பித்து மூன்று பணப்பைகளைக் கையில் எடுத்து அவர்களுக்குக் காட்டி, பிள்ளைகாள், இந்தப் பை ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு நாணயம் இருக்கின்றது; இதை முதற்பணமாக வைத்துக்கொண்டு உங்கள் புத்திக்குத்தோன்றிய ஏதேனும் ஒரு வியாபாரஞ்செய்து பொருள் ஸம்பாதித்துக்கொண்டுவந்து, அந்தப் பொருளைத் தினந்தோறும் மாலையில் எனக்குக் காட்டுங்கள்; பொருள் ஸம்பாதிக்கும்பொழுது, பொய் புரளி மோசம் திருட்டு முதலிய கெட்ட காரியங்களில்மாத்திரம் ஒருபோதும் தலையிடாதேயுங்கள்; ஏனெனில், அவ்வாறு தீயவழியில் தேடியபொருள் விரைவில் அழிந்துபோம் என நற்புத்திபோதித்து ஒவ்வொரு பிள்ளைக்கும் ஒவ்வொரு பை கொடுத்தான்.

பிள்ளைகள் மூவரும் "தந்தைசொன்மிக்க மந்திரமில்லை" என்று அதற்கு உடன்பட்டு ஸந்தோஷமாய்ப் பையைப் பெற்றுக்கொண்டு, பின்பு பொருள்தேடுகிறவழி யென்னவென்று ஆலோசிக்கலானார்கள். இவ்விதமாய்ச் சும்மா சோம்பித்திரிந்தவர்களுடைய மனதில் பொருள் ஸம்பாதிக்கவேண்டுமென்னும் ஆசை வேரூன்றிற்று. ஆயினும் பெரியபிள்ளைகள் இருவரும் அதைப்பற்றிப் பல உபாயங்களை ஆலோசிக்கலானார்கள்; எவ்வளவு ஆலோசித்தும் பிச்சைபுகுவதுதவிர வேறொருவழியும் அவர்களுக்குத் தகுந்ததாய்த் தோன்றாமல் தவித்துக்கொண்டிருந்தார்கள். கடைசிப்பிள்ளையோ அவ்வாறன்றிச் சிறுதுநேரம் ஆலோசித்து, எவ்விதத்திலாயினும் பொருள்தேடுவது பெரிதேயன்றி அதைத் தேடுமுபாயம் அத்தனை அவசியமானதன்று எனத் தீர்மானித்து, அன்று சாயங்காலத்திற்குள்ளேயே மற்றொரு நாணயம் தேடிக்கொண்டு வந்துசேர்ந்தான்.

அவன் தேடிக்கொண்டுவந்த வழி யாதென்பீர்களோ! அபெந்தாலியினுடைய வீட்டிற்குச் சமீபத்தில் ஒரு கிழவியிருந்தாள். அவள் இவர்களுக்குக் கிட்டின வுறவினளல்லாவிடினும், ஏதோ ஒருவகையில் உறவினளாயிருந்தாள். அந்த ஸமயத்தில் அந்தக் கிழவி தள்ளாதவளாகிப் படுத்தபடுக்கையாய்க் கிடந்தாளாயினும் மிகுந்த செல்வமுடையவளாயிருந்தமையால், அச்சிறுவன் அவள் வீட்டிற்குச்சென்று அவள் படுத்திருந்த கட்டிலண்டை போய் நின்றான். அவன் மிகக் குள்ளனாயிருந்தமையால் அவன்

முகம்கூட அவளுக்குத் தெரியவில்லை. அதனால் நீயாரென்று அவள் கேட்டதற்கு, அவன், நான் அபெந்தாலியின் மகன், உன் தேக ஸௌக்கியத்தை விசாரித்துவரும்படி அவர் என்னை உன்னிடம் அனுப்பினார் என்றான்.

அதுகேட்டு அந்தக் கிழவி, நெடுநாளாய்த் தங்களிருவர்க்கும் எவ்விதமான யோகக்ஷேமவிசாரணையும் நடவாதிருந்தும், அபெந்தாலி தன்னிடத்தில் அவ்வளவு அன்புவைத்திருக்கிறானேயென்று மனமகிழ்ந்து, அச்சிறுவனை மிகவும் ஆதரித்து அவனுக்கு ஒரு பொன்நாணயம் பரிசாகக்கொடுத்துச் சில தின்பண்டங்களுந் தந்து அவனை ஸந்தோஷப்படுத்தி அனுப்பினாள்.

அன்று மாலைவேளையில் அப்பிள்ளைகள் மூவரும் தங்கள் பைகளைத் தகப்பனாருக்குக் கொண்டுபோய்க் காட்டும்போது, மூத்தவர்களிருவரும் முன்போலவே பைகளை வைத்துக்கொண்டிருந்தார்கள். குள்ளச்சிறுவனோ முன்னதிலும் அதிகமாக ஒருநாணயம் சேர்த்துக்கொண்டுவந்திருந்தான்.

அன்று மறுநாளும் அச்சிறுவன் முன்போலவே கிழவியினிடம்போய் விசாரித்தான். அவளும் அவனை அன்புடன் ஆதரித்து அன்றையதினமும் ஒரு நாணயம் கொடுத்தனுப்பினாள். இவ்வண்ணமே நாள்தோறும் அச்சிறுவன் அந்தக் கிழவியைப்போய் விசாரித்து அவளிடத்தினின்றும் ஒவ்வொரு நாணயம் பெற்றுக்கொண்டுவந்தான்.

இப்படியிருக்க ஒருநாள் அப்பிள்ளைகளின் தந்தையான அபெந்தாலி வெளியே சவாரிபோய்வரும்போது மேலே சொன்ன கிழவியை நினைத்துக்கொண்டு அவளை விசாரித்துவரும்படி அவள் வீட்டிற்குச் சென்றான். படுக்கையில் படுத்திருந்த கிழவி இவன் வந்தசெய்தி தெரிந்து தன் படுக்கையண்டை வரவழைத்து, உங்களுக்கு என்னிடத்தில் இத்தனை பிரீதி இருக்கிறதென்று இப்பொழுதுதான் எனக்குத் தெரியவந்தது; சிலதினங்களாக நாள்தோறும் என் தேகசவுக்கியத்தை விசாரித்துவரும்படி இச்சிறுமகனை என்னிடம் அனுப்புகிறீர்களல்லவா என்றுசொல்லி, அங்கே உட்கார்ந்திருந்த சிறுவனையும் காட்டி, இவன் மிகவும் புத்திசாலி; பெரியோரிடத்தில் மட்டுமரியாதைகள் தெரிந்தவன். அதனால் இவனுடைய குணங்களைப்பார்த்து ஸந்தோஷித்து நாள்தோறும் நான் இவனுக்கு ஸம்மானம் செய்துகொண்டுவருகிறேன்; நீங்களும் இவனிடத்தில் மிகவும் அபிமானம்வைக்கவேண்டும் என்று சொன்னாள்.

அவள் இச்செய்திகளைச் சொல்லும்பொழுது அபெந்தாலி சிறுநகையுடனே கேட்டுக்கொண்டிருந்து அவள் யாவும் சொல்லி

முடித்தபின்பு அவனைநோக்கி, அம்மா! இச்சிறுவன் உன்னுடன் சொல்லியது ஒருபேச்சானாலும் உண்மையல்ல; நான் இவனை உன்னிடம் அனுப்பினவனுமன்று; உன் க்ஷேமங்களை விசாரித்துவரும்படி சொன்னவனுமன்று; இவன் ஏதோ தன் சொந்தக்காரியமாய் உன்னிடம்வந்தானேயொழிய மற்றப்படியல்ல என்றுசொல்லி, அவளுடைய க்ஷேமங்களை விசாரித்துவிட்டுத் தன் வீட்டுக்குப்போயினான்.

அஜீப் எனும் அச்சிறுவன் புத்திசாலியென்று அக்கிழவி சொல்லியது பொய் அன்று; தகப்பன் எழுந்துபோமளவும் வாயைத்திறவாமல் அவன் சொன்னதையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்தான். அபெந்தாலி அப்புறம்போனபின்பு கிழவி சிறுவனைநோக்கி, பிள்ளாய், நீ இப்படி என்னுடன் பலதரம் பொய்பேசி என்னை மோசம்செய்யலாமா? இதற்குள் இவ்வளவு பொய்பேச எங்கே கற்றுக்கொண்டாய் என்று கேட்டாள். அதற்கு அச்சிறுவன் மிகவும் விசனமடைந்தவன்போலப் பாசாங்குசெய்து, அம்மா, நான் இந்தப்பொய் பேசியது அத்தனை குற்றமானதல்ல, இதற்காகக் கடவுள் என்னிடத்தில் கோபங்கொள்ளமாட்டாரென்று நினைக்கிறேன். என் தகப்பனார்சொல்லியது மெய்தான்; உன்னை விசாரித்துவரும்படி அவர் உன்னிடம் என்னை அனுப்பவில்லை; ஆயினும் அவர் அடியோடு உன்னை விசாரியாமல் உபேக்ஷைசெய்திருப்பதைப் பார்க்கப்பொறுமல், அவர் பேரைச்சொல்லி நாமாவதுபோய் விசாரித்துவிட்டு வருவோமென்று வந்தேன். இது அத்தனை குற்றமாய் என் புத்திக்குத் தோற்றவில்லை; இதைத்தான் அவர், நான் ஏதோ என்சொந்தக்காரியமாய்வந்து பொய்பேசியதாகப் பழிகூறுகிறூர் என்றூன்.

அதுகேட்டு அந்தக்கிழவி, ஐயோ பாவம்! இவன் சிறிதும் குற்றமில்லாதவன்; உயிர்களிடத்தில் மிகவும் அனுதாபமுள்ளவன் என்றுநினைத்து தன் கட்டிலின்மேல் ஏறிவரச்சொல்லி அவனை முத்தமிட்டுக்கொண்டாள். மேலும், அவன் தன்னை விசாரிக்கவந்தவனேயொழிய, அற்பமான காசைக் கருதிவந்தவனல்லவென்று அவள் பூரணமாய் நம்பினபடியால், தன் விஷயத்தில் அவனுக்கு உண்டான ஸந்தேகம் நீங்கும்படி அன்றையதினம் அவனுக்குப் பின்னும் ஒருநாணயம் கொடுத்தனுப்பினாள்.

அன்றிராத்திரி வழக்கப்படி அபெந்தாலி பிள்ளைகளின் பைகளைச் சோதிக்கும்பொழுது, அஜீபினுடைய பையில்முதனாள் இருந்ததைப்பார்க்கிலும் இரண்டுமூன்றுநாணயம் அதிகமாய் இருக்கக்கண்டு, சரிதானென்று தலையசைத்தான். அதுகண்டு அச்சிறுவன் அவன் அபிப்பிராயம் இன்னதென்று தெரிந்துகொண்டு, ஐயா, இந்த நாணயங்கள் நீர் நினைக்கிறபடி நான் மற்றெங்கும்போய்த் தேடிக்கொண்டு வரவில்லை என்றூன்.

அதைக்கேட்டு மூத்தமகன் சொன்னதாவது, ஐயா இவன் சொல்வது உண்மைதான்: ஒவ்வொரு நாளும் தப்பாமல் இராத்திரி ஒவ்வொருநாணயம் இவன் சம்பாதித்துக்கொண்டுவருகிறான்; நாம் மூத்தவர்களாயிருந்தும் ஒருகாசுகூடச் சம்பாதிக்கமாட்டாமல் இருக்கிறோமேயென்று நாங்கள் இருவரும், நீ பொருள்தேடிக்கொண்டுவருகிற உபாயத்தை எங்களுக்கும் கொஞ்சம் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டோம். அதற்கு இவன், நாங்கள் கையில் வைத்துக்கொண்டிருக்கிற நாணயத்தைக் கொடுத்தாலல்லது அந்த ரகசியத்தைச் சொல்லமாட்டேன் என்றான். அப்படியே நாங்கள் கொடுத்துவிட்டு உள்ளதும்போய் அல்லாடுகிறோம் என்றான்.

என்று சொன்னவுடனே மூத்தவர்கள் இருவரும் அச்சிறுவன் மேல் திரும்பிக்கொண்டு அவனைப் பொய்யனென்றும் சூதனென்றும் திட்டினார்கள். ஏனெனில், அவன் சொன்னபடியே அவர்கள் அந்தக் கிழவிவீட்டுக்குப் போனபோது அவள், அஜீப்புக்குக் கொடுத்ததுபோல இவர்களுக்கும் பொன் கொடுப்பதைவிட்டு, நீங்கள் இவ்விடம் வந்தகாரணம் எனக்குத் தெரியும், என் வீட்டில் நில்லாதேயுங்கள், உடனே இவ்விடம்விட்டு ஓடிப்போனால் பிழைத்தீர்கள் என்றுசொல்லித் துரத்திவிட்டாள்.

அதைக் கேட்கும்போது அபெந்தாலிக்கு உண்டான சிரிப்பு இவ்வளவவ்வளவல்ல; ஏனெனில், அச்சிறுபையன் அந்தக்கிழவியினிடத்தில்போய்ப் பொய்பேசியதுமல்லாமல், தமையன்மார்களையும் ஏமாற்றி அவர்கள் வைத்துக்கொண்டிருந்த கொஞ்சம் பொருளையும் பிடுங்கிக்கொண்டானல்லவா? ஆயினும் அபெந்தாலி தன் மூத்தபிள்ளைகளையழைத்து, குழந்தைகாள், இச்சிறுவன் உங்களுடன் சொல்லியது பொய்யன்று; உங்களுடைய துர்ப்பாக்கியம் அவள் ஒன்றும் கொடாமல் துரத்திவிட்டாள், அதற்கு யார் என்ன செய்யலாமென்று அவர்களுக்குச் சமாதானம்சொல்லித் தேற்றினான்.

இது நடந்த ஒருமாதத்துக்குள்ளே அபெந்தாலிக்கு மரணகாலம் வந்துவிட்டது. அப்போது அவன் தன் பிள்ளைகளைப் படுக்கையண்டையழைத்து, அவர்களை கட்டிக்கொண்டு அவர்களுடன் சொன்னதாவது:—

என் அருமைக்குழந்தைகாள், நான் ஸம்பாதித்த ஆஸ்தியெல்லாம் என் தலைமாட்டண்டை சுவரில் ஒரு பானையிலே போட்டு வைத்திருக்கிறேன். அதை நீங்கள் எப்படி பாகம் பிரித்துக்கொள்வதென்பீர்களோ? மூத்தவர்களாகிய நீங்கள் இரண்டுபேரும் சம்பாதிக்கத் திறமையற்றவர்களாயிருப்பதனால், நீங்கள் இருவருமே அதைச் சரிபாதியாகப் பங்கிட்டு எடுத்துக்கொள்ளுங்கள். அஜீப் தானே சம்பாதித்துக்கொள்ளத்தக்க திறமையுடையவனாயிருப்பதால் அவனுக்கு நாம் பாகம் கொடுக்கவேண்டியதில்லையென்று சொன்னான்.

இப்பேச்சைச் சொல்லிமுடித்ததும் அபெந்தாவிக்குப் பிராணன்போய்விட்டது. அவன் இறந்தவுடனே அவன் பணம் புதைத்துவைத்திருப்பதாகச் சொன்னவிடத்தைப் பிள்ளைகள் வெட்டிப்பார்த்தார்கள். தகப்பன் சொன்னபடியே அவ்விடத்தில் பெரிய ஒரு மட்பாத்திரத்திலே நிரம்பப் பணம் வைத்திருந்தது. அதைப் பார்த்து வெகுஸந்தோஷமாய்த் தகப்பன் சொல்லிப்போனபடியே மூத்தவர்கள் இருவரும் அதைப் பங்கிட்டுக்கொண்டார்கள். சித்திரக்குள்ளன் என்னசெய்வான்? தகப்பன் இறந்த துக்கத்தோடுகூடத் தனக்கு ஒன்றும் ஆஸ்தி இல்லையேயென்ற துக்கமும் சேர்ந்து அதிகமான விசனமுண்டாயிற்று. ஆயினும் அவனுக்கு ஒன்றும் கிடைக்காமற்போகவில்லை; அவர்களுக்கு உறவானகிழவி அசவுக்கியமாய்ப் படுத்திருக்கிறுளென்று சொன்ேனுமே—அபெந்தாவி இறந்த மறுநாள் அவளும் இறந்துபோனுள். இறக்கும்போது அவள் தன் மாணசாஸனத்திலே தன் ஆஸ்தியில் ஒரு பங்கு அஜீப்புக்குக் கொடுக்கும்படியாக எழுதிவைத்தாள். அந்தத் தொகை அவன் அண்ணன்மார்க்குக் கிடைத்த தொகைக்குக் குறைந்ததன்று; அதனுல் அவனும் ஒருவாறு திருப்தியடைந்திருந்தான்.

(இன்னும் வரும்.)

சமாசாரம்.

எகிப்துதேசத்துக் கலகம்.—எகிப்துதேசத்தில் துலுக்கராஜ்யத்துடன் சேர்ந்த கர்த்தூம் நகரத்தில் அங்கிலேயருடைய ஸ்தானுபதியாகப் போயிருந்த ஜனரல் கார்டன் என்னும் சேனுபதியை அவ்விடத்துத் துருக்கன் ஒருவன் ஒரு காரணமுமின்றிக் கொலைசெய்துவிட்டதாகத் தெரியவந்தது. அதுகாரணமாக அங்கிலேயருக்கும் அவ்விடத்துத் துருக்கருக்கும் போர் பிரபலமாக நடக்கலாயிற்று. அப்படி அநியாயமாய் இறந்துபோன ஜனரல் கார்டனுடைய குடும்பத்துக்கு 20,000 பவுன் ஸஹாய தனம் கொடுக்கும்படி அங்கிலேய துரைத்தனத்தார் தீர்மானித்திருக்கிறுர்களாம்.

ருஷியர்களின் படையெடுப்பு.—ஆப்கனிஸ்தானத்துக்கு அண்டையில் படையெடுத்து வந்து காத்திருக்கிற ருஷியர்களுக்கும் அங்கிலேயருக்கும் போர் நடக்குமோ, சமாதானமே ஆகுமோ, அதன் நிச்சயம் ஒன்றும் இன்னும் தெரியவில்லை. ஸமாதான உடன்படிக்கை ஒன்றும் சரிப்படாமல் ஆலோசித்துக்கொண்டிருப்பதாய்த் தெரியவருகின்றது. ஒருவேளை யுத்தமே நடக்கும் பக்ஷத்தில் நேபாளதேசத்தாரும் சீக்கியரும் பின்னும் பல சுதேச மன்னர்களும் தம்மாலியன்றவளவு வஞ்சனையில்லாமல் அங்கிலேயர்க்கு உதவிபுரியச் சித்தமாயிருக்கிறுர்கள்.

C. K. S. Press, Vepery, Madras. 1885.



××× பார்சீகத்து க்கும் ருஷியர் கைக்கொண்ட நாட்டிற்கும் மத்திய எல்லை.

----- ஆப்கானிஸ்தானத்துக்கும் பார்சீகத்துக்கும் மத்திய எல்லை.

===== ருஷியர் தாவா செய்கிற எல்லை.